بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 துல்ஹஜ் 01 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1404 - ஹிஜ்ரத் 29 ★ 29 மே 2025


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلّٰهِ ؕ فَاِنْ اُحْصِرْتُمْ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ ۚ

**பொருள்**

**ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்(வின் திருப்தி)க்காக முழுமையாக்குங்கள். பின்னர் (ஏதாவதொரு காரணத்தால்) நீங்கள் தடுக்கப்பட்டால் எளிதில் கிடைத்திடும் குர்பானியை (கொடுத்து விடுங்கள்). (அல்பக்கரா:197)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஒற்றுமை இல்லாமல் போனால் பின்னர் நீங்கள் நற்பேறு இழந்தவர்களாக இருப்பீர்கள்

## முதலில் இறைவனின் ஏகத்துவத்தை மேற்கொள்ளுங்கள். இரண்டாவதாக பரஸ்பரம் அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்துங்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நீங்கள் பரஸ்பரம் ஒற்றுமையுடன் இருங்கள்; ஒன்றுகூடி வாழுங்கள் என்று ஜமாஅத்தினருக்கு பரஸ்பரம் ஒற்றுமை மற்றும் நேசத்துடன் இருப்பது தொடர்பாக முன்னர் பலமுறை நான் கூறியிருக்கின்றேன். நீங்கள் ஒன்றுபட்டு இருங்கள்; இல்லையென்றால் வெளியேறிவிடுவீர்கள் என்றே இறைவன் முஸ்லிம்களுக்கு போதனையை நல்கியுள்ளான். பரஸ்பரம் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பதற்காகவே தொழுகையில் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து நில்லுங்கள் என்ற கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் மின்சார சக்தியைப் போன்று ஒருவரின் நன்மை மற்றவரிடம் ஊடுருவி விடும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஒற்றுமை இல்லாமல் போனால் பின்னர் நீங்கள் நற்பேறு இழந்தவர்களாக இருப்பீர்கள். நீங்கள் பரஸ்பரம் அன்பு செலுத்துங்கள். மேலும் ஒருவர் மற்றவருக்காக மறைமுகமான துஆக்களை செய்யுங்கள். ஒருவர் மறைமுகமான துஆ செய்கின்றார் என்றால் பின்னர் உமக்காகவும் அவ்வாறு ஆகட்டும் என்று வானவர் துஆ செய்கின்றார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தை கொண்ட விஷயமாகும்! மனிதனின் துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லையென்றாலும் பின்னர் வானவரின் துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்றது. நான் அறிவுரை செய்கின்றேன்;மேலும் பரஸ்பரம் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என்று கூற விரும்புகின்றேன்.

முதலில் இறைவனின் ஏகத்துவத்தை மேற்கொள்ளுங்கள். இரண்டாவதாக பரஸ்பரம் அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்துங்கள். அந்நியர்களுக்கு அற்புதமாக திகழும் அந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்துங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 457, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## ஒவ்வொரு நபருடைய செல்வத்திலும் அவருடைய உறவினர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் பயணிகளுக்கும் உரிமை உள்ளது. எவருடைய செல்வமும் அவருடைய செல்வமாக மட்டுமே இருப்பதில்லை. மாறாக அதில் மற்றவர்களுக்குரிய உரிமைகளும் அடங்கியிருக்கின்றன

وَاٰتِ ذَا الْقُرْبٰى حَقَّهٗ وَالْمِسْكِيْنَ وَابْنَ السَّبِيْلِ وَلَا تُبَذِّرْ تَبْذِيْرًا

(17:27)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு நபருடைய செல்வத்திலும் அவருடைய உறவினர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் பயணிகளுக்கும் உரிமை உள்ளது. உறவினர்கள் மனிதன் வருமானம் ஈட்டுவதில் பல வகையில் உதவிக்கான காரணியாக இருக்கின்றனர். எனவே அவரது செல்வத்தில் அவர்கள் அனைவருக்கும் உரிமை உள்ளது. உதாரணமாக, பெற்றோர்கள் தனது ஒரு மகனுக்கு கல்வி வழங்கி விட்டனர்; அவர் ஏதாவது ஒரு உயர் பதவியை அடைந்து விடுகின்றார்; மற்ற சகோதரர் கல்வியிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்கின்றார் என்றால் பின்னர் அந்த (உயர்) பதவி வகிப்பவரின் செல்வத்தில் மற்ற சகோதரர்களுக்கும் உரிமை உள்ளது. ஏனெனில், எந்த பணத்தால் அவருக்கு கல்வி வழங்கப்பட்டதோ அதில் அவர்கள் அனைவருக்கும் உரிமை இருந்தது.

ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அல்லாஹ் உரிமையை நிர்ணயித்துள்ளான். மற்றோர் இடத்தில்

وَفِيْٓ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَالْمَحْرُوْمِ

என்று தெளிவாக கூறிவிட்டான். (அஸ்ஸாரியாத்: )

மனிதனின் செல்வங்களில் யாசிப்பவர்கள் போன்றவர்களின் உரிமையும் இருக்கின்றது. எவருடைய செல்வமும் அவருடைய செல்வமாக மட்டுமே இருப்பதில்லை. மாறாக அதில் மற்றவர்களுக்குரிய உரிமைகளும் அடங்கியிருக்கின்றன.

(துஃப்ஸீரே கபீர்,தொகுதி 4, பக்கம் 323, காதியான் பதிப்பு 2010)

* * * * * *

## நபிமொழி

எவ்வளவு பெரிய செல்வந்தராக ஒருவர் இருப்பாரோ அவ்வளவு அதிகமான தேவையுடையவராக இருப்பார். செல்வத்தை இவ்வாறு செலவு செய்கின்ற அந்த நபரைத் தவிர

**(2388)** ஹஸ்ரத் அபூ தர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அன்னார் (ஸல்) உஹது மலையைப் பார்த்த போது கூறினார்கள்: (மலையான) இது எனக்காக தங்கமாக ஆக்கப்பட்டாலும் அதிலிருந்து என்னிடம் மூன்று நாட்களுக்கும் அதிகமாக ஒரு தீனார் இருப்பதை (கூட) நான் விரும்ப மாட்டேன்.

அடுத்து அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவ்வளவு பெரிய செல்வந்தராக ஒருவர் இருப்பாரோ அவ்வளவு அதிகமான தேவையுடையவராக இருப்பார். செல்வத்தை இவ்வாறு செலவு செய்கின்ற அந்த நபரைத் தவிர!

ஹஸ்ரத் ஸய்யது ஸைனுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

இதன் பொருள் இதுவாகும். அதாவது செல்வச் செழிப்பு என்பது பணத்தை சேமித்து வைப்பதில் இல்லை. இன்னும் கூறப்போனால், பெரும்பாலான செல்வந்தர்கள் உயர் நல்லொழுக்கங்களிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருப்பதற்கு இந்த செல்வம் காரணமாக இருக்கின்றது. செல்வச் செழிப்பு என்பது செல்வத்தை சேர்த்து வைப்பதில் இல்லை. மாறாக வலமும், இடமும் செலவு செய்வதில் இருக்கின்றது. அதாவது மார்க்க மற்றும் பௌதீக தேவைகளுக்காக செலவு செய்வதால் செல்வத்தின் நோக்கம் முழுமையடைகின்றது. எவர் பணத்தை சேர்த்து வைத்துள்ளாரோ அவர் உரிமைகளை செலுத்துவதற்காக அவற்றை செலவிடவில்லையென்றால் அவரே எல்லாரையும் விட வறியவர் ஆவார். ஆனால், எந்த நபர் செல்வத்தால் உரிமைகளை நிறைவேற்றினாரோ அவரே தன்னிறைவு பெற்றவர் ஆவார். அவர் செல்வத்தின் அசல் நோக்கத்தை பெற்று விட்டார். (ஸஹீஹ் புஹாரீ, காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு மற்றும் எட்டாம் ஆண்டு நடைபெற்ற சில போர்கள் மற்றும் ஸரிய்யாக்களின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு

ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்கள் ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு 30 நபர்களுடன் ஃபதக்கில் முர்ராவை நோக்கி சென்றார்கள். பனூ முர்ரா மக்கள் ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்களின் அனைத்து தோழர்களையும் ஷஹீது ஆக்கினார்கள்

---

(ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:) நீங்கள் எனக்கு மாறு செய்யாதீர்கள். ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்றால், எவர் தன்னுடைய அமீருக்கு கட்டுப்படுவாரோ அவர் எனக்கு கட்டுப்பட்டவராவார். எவர் அவருக்கு மாறு செய்வாரோ அவர் எனக்கு மாறு செய்யக் கூடியவர் ஆவார். ஆகவே, நீங்கள் எனக்கு கட்டுப்படவில்லை என்றால் நீங்கள் உங்களுடைய நபிக்கும் கட்டுப்படாதவர் ஆவீர்கள். பிறகு, ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் அவர்களுக்கிடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள்

---

முஃதா போருக்கு படையை அனுப்பி வைத்தவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படைக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்: அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுங்கள், உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வை மறுப்பவர்களுடன் போரிட செல்லுங்கள். நீங்கள் ஏமாற்றக் கூடாது; மோசடி செய்யக் கூடாது; பால் அருந்தும் எந்த ஒரு குழந்தையையும் கொலை செய்யக் கூடாது; எந்த ஒரு பெண்ணையும் வயதானவரையும் கொல்லக் கூடாது; எந்த ஒரு பேரிச்சம் மரத்தையும் வெட்டக் கூடாது; எந்த அளவுக்கென்றால், எந்தவொரு மரத்தையும் வெட்டக் கூடாது; எந்த ஒரு கட்டடத்தையும் இடிக்கக் கூடாது

**இன்றும் ஒரு தகவல் கிடைத்துள்ளது. கஸூர் எனும் ஒரு கிராமத்தில் அஹ்மதி இளைஞர் ஒருவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார் என்று. விவரங்கள் இன்னும் வந்தடையவில்லை. அல்லாஹ் அநியாயக்காரர்களை விரைவில் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக**

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 ஏப்ரல் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **25 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த பல்வேறு படையெடுப்புகள் பற்றிய குறிப்பு எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஃபதக்கை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஃகாலிப் பின் அப்தில்லாஹ் லைஸீ (ரலி) அவர்களின் போர் படை தொடர்பான குறிப்பும் காணக்கிடைக்கிறது. ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்கள் ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு 30 நபர்களுடன் ஃபதக்கில் முர்ராவை நோக்கி சென்றார்கள். பனூ முர்ரா மக்கள் ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்களின் அனைத்து தோழர்களையும் ஷஹீது ஆக்கினார்கள். இதைப் பற்றிய குறிப்பு ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்களின் தோழர்களுடைய ஷஹாதத்துடைய செய்தி கிடைத்த போது அன்னார் (ஸல்), ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்களை ஆயத்தம் செய்தார்கள். நீங்கள் புறப்படுங்கள்; ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்களுடைய தோழர்கள் ஷஹீதாக்கப்பட்ட இடத்திற்கு செல்லுங்கள். அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்கினால் அவர்கள் எவரையும் விடாதீர்கள் என்று கூறினார்கள். அதாவது எந்த எதிரிகள் அநியாயம் செய்தார்களோ, கொலை செய்தார்களோ, முஸ்லிம்களை ஷஹீதாக்கினார்களோ அவர்களை விடாதீர்கள் என்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் 200 ஸஹாபிகளை அவர்களுடன் அனுப்ப ஆயத்தம் செய்தார்கள். அவர்களுக்காக கொடியை கட்டினார்கள். ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் எதிரியை நெருங்கிய பிறகு ஒற்றர்களை அனுப்பி வைத்தார்கள். அதாவது ஹஸ்ரத் உல்பா பின் ஸைது (ரலி) அவர்களுடன் பத்து நபர்களை எதிரிகள் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவர்கள் ஒரு கூட்டத்தை பார்த்தார்கள். பிறகு, திரும்பி வந்து அனைத்து சூழ்நிலைகளையும் எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்றார்கள். எந்த அளவு எதிரிக்கு அருகில் சென்று விட்டார்கள் என்றால், அவர்களை காண முடிந்தது. எதிரியோ நிம்மதியுடன் தூங்கிக் கொண்டிருந்தான். பிறகு அவர்கள் தம்முடைய தோழர்களிடம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஏக இறைவனாகிய இணையற்ற அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுமாறு நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். மேலும் நீங்கள் எனக்கு கட்டுப்படுங்கள்; எனக்கு மாறு செய்யாதீர்கள். என்னுடைய எந்த ஒரு கட்டளைக்கும் மாறு செய்யாதீர்கள். ஏனெனில், எவர் கட்டுப்படுவதில்லையோ அவருடைய எந்த கருத்தும் ஏற்றுக் கொள்ளப்படாது என்று கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: (ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:) நீங்கள் எனக்கு மாறு செய்யாதீர்கள். ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்றால், எவர் தன்னுடைய அமீருக்கு கட்டுப்படுவாரோ அவர் எனக்கு கட்டுப்பட்டவராவார். எவர் அவருக்கு மாறு செய்வாரோ அவர் எனக்கு மாறு செய்யக் கூடியவர் ஆவார். ஆகவே, நீங்கள் எனக்கு கட்டுப்படவில்லை என்றால் நீங்கள் உங்களுடைய நபிக்கும் கட்டுப்படாதவர் ஆவீர்கள். பிறகு, ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் அவர்களுக்கிடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். இன்ன நபரே! நீங்கள் இன்ன நபருடன் இருங்கள்; இன்ன நபரே! நீங்கள் இன்ன நபருடன் இருங்கள்! என்று கூறியவாறு உங்களில் ஒருவர் தம்முடைய சகோதரரை விட்டு தனியாகிவிட வேண்டாம். உங்களில் ஒருவர் என்னிடத்தில் வரும்போது நான் அவருடைய தோழர் எங்கே? என்று கேட்டால் தமக்கு தெரியவில்லை என்று அவர் கூறக் கூடியவராக இருக்க வேண்டாம்! நான் தக்பீர் கூறும்போது நீங்களும் என்னுடன் தக்பீர் கூறுங்கள்! என்று கூறினார்கள். பிறகு முஸ்லிம்கள் போரை ஆரம்பித்தபோது, முஸ்லிம்கள் எதிரிகளை சுற்றி வளைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஃகாலிப் (ரலி) அவர்கள் தக்பீர் முழக்கமிட்டபோது மற்ற ஸஹாபா பெருமக்களும் தக்பீர் முழக்கமிட்டவாறு கையில் வாளை ஏந்திக் கொண்டார்கள். போருக்காக எதிரியும் ஆயத்தமாகி வெளியே வந்தான். சிறிது நேரம் வரை போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் விரும்பியபடி அவர்களை கொன்றார்கள். அந்த நாளில் அல்லாஹ்வே! எதிரியை கொல்வாயாக! என்பது முஸ்லிம்களுடைய முழக்கமாக இருந்தது. முஸ்லிம்கள் பல ஒட்டகங்களையும், ஆடுகளையும் போர்ச் செல்வமாக கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு நபருடைய பங்கிலும் 10 ஒட்டகங்கள் கிடைத்தன அல்லது ஓர் ஒட்டகத்திற்கு பதிலாக பத்து ஆடுகள் கிடைத்தன.

பிறகு இன்னொரு படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. ரஸ்லீ எனும் இடத்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் ஷுஜாஃ பின் வஹப் (ரலி) அவர்களின் போர் படையாகும். இந்த படையெடுப்பு ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஹஸ்ரத் ஷுஜாஃ பின் வஹப் (ரலி) அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. ரஸ்ஸீ என்பது மதீனாவில் இருந்து 5 இரவு பயண தொலைவில் மக்கா மற்றும் பஸ்ராவுக்கு இடையில் உள்ள ஓர் இடமாகும். ஹஸ்ரத் ஷுஃஜா பின் வஹப் (ரலி) அவர்களின் தந்தை பெயர் வஹப் பின் ரபீஆ ஆகும். ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட ஸஹாபிகளுள் ஒருவராக கணக்கிடப்படுகிறார். பெருமானார் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் ஆறு ஆண்டுகள் கழிந்த பிறகு அன்னாருடைய அனுமதியுடன் அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த இரண்டாவது குழுவில் இணைந்து இவர்கள் அபிஸீனியாவிற்கு சென்று விட்டார்கள். கொஞ்சம் காலத்திற்கு பிறகு மக்காவாசிகள் முஸ்லிமாகிவிட்டார்கள் என்ற வதந்தி பரவிய போது ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்கள் அபிஸீனியாவிலிருந்து திரும்ப மக்காவுக்கு வந்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு ஸஹாபா பெருமக்களுக்கு கட்டளை இட்ட போது இவர்கள் தம்முடைய சகோதரரான உக்பா பின் வஹபுடன் மக்காவை விட்டு மதீனாவுக்கு சென்று விட்டார்கள். ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்கள் பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டுள்ளார்கள். 40 வயதை விட கொஞ்சம் அதிகமாக வாழ்ந்து யமாமா போரில் ஷஹீதானார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த படையெடுப்பின் விபரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: ரஸ்ஸீ எனும் பகுதியில் ஹவாஸின் மக்கள்

இஸ்லாத்தின் எதிரிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், முஸ்லிம்களின் நட்புக் கோத்திரங்களைச் சேர்ந்த நபர்களிடம் கொள்ளையடித்து விட்டு காடுகளில் ஒளிந்து கொள்கிறார்கள் என்றும் அன்னாருக்கு தொடர்ச்சியாக செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்தன. ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்களிடத்தில் 24 முஹாஜிர்களை கொடுத்து பனூ ஹவாஸினை அழித்தொழிப்பதற்காக நியமித்தார்கள். அம்மக்கள் பனூ ஆமிர் என்றும் கூறப்படுகின்றது. ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்கள் தம் தோழர்களுடன் இரவில் பயணம் செய்வார்கள். பகலில் மறைந்திருப்பார்கள். எந்த அளவுக்கு என்றால் திடீரென்று பகல் வேளையில் பனூ ஆமிரை சென்றடைந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஹஸ்ரத் ஷுஃஜா (ரலி) அவர்கள் தம் தோழர்களுக்கு அம்மக்களை பின்னால் விரட்டிச் செல்லக் கூடாது என்று கட்டளையிட்டு இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு பல ஒட்டகங்களும் ஆடுகளும் கிடைத்தன. அவற்றை அவர்கள் மதீனாவுக்கு கொண்டு வந்து போர்ச் செல்வத்தை பங்கிட்டனர். ஒவ்வொரு நபருடைய பங்கிலும் 15 ஒட்டகங்கள் கிடைத்தன. இந்த படையெடுப்புக்காக மொத்தம் 15 நாட்கள் செலவானது.

பிறகு இன்னொரு படையெடுப்பு பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. ஸாத்தே அத்லாஹ் ஐ நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் கஅப் பின் உமைர் (ரலி) அவர்களின் போர்ப் படையாகும். இந்த படையெடுப்பு ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கஅப் பின் உமைர் ஃகிஃப்ஃபாரீ (ரலி) அவர்களை ஸாத்தே அத்லாஹ் எனும் இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அது சிரியாவில் வாதியுல் குறாவுக்கு பிற்பகுதியில் இருந்தது. மேலும் அது முஃதாவுடைய சுற்று வட்டார பகுதியாக இருந்தது. மதீனாவில் இருந்து ஏறக்குறைய 600 மைல் தொலைவில் இருந்தது. ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்களுடன் 15 ஸஹாபிகள் இருந்தார்கள். பனூ குஸா மக்கள் வாதியுல் குறாவுக்கு முன்னால் ஸாத்தே அத்லாஹ்வில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பெரும் படையை திரட்டிக் கொண்டிருப்பதாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. ஸாத்தே அத்லாஹ் சென்ற பிறகு ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்களுக்கு எதிரியின் மிகப் பெரும் படையை காண நேர்ந்தது. அதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் புறப்பட்டு ஸாத்தே அத்லாஹ் சென்றடைந்த போது, எதிரிகளுடைய ஒற்றன் ஒருவன் இவர்களை பார்த்து விட்டான். அவன் உடனடியாக சென்று தம்முடைய நபர்களுக்கு முஸ்லிம்களின் வருகையை குறித்து தகவல் கொடுத்து விட்டான். ஆகவே அவர்கள் ஆயத்தம் மேற்கொண்டு விட்டார்கள். மிகப் பெரிய படையை திரட்டி விட்டார்கள். ஸஹாபிகள் அம்மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தார்கள். ஆனால், அவர்கள் அதை மறுத்து விட்டார்கள்.அவர்கள் ஸஹாபிகள் மீது அம்பெய்ய ஆரம்பித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்கள் இம்மக்களுடைய இந்த நடவடிக்கையை கண்ட போது அவர்களை எதிர்த்து துணிவுடன் போர் செய்தார்கள். எந்த அளவுக்கு என்றால், போரிட்டவாறே அனைவரும் ஷஹீது ஆகிவிட்டார்கள். அந்த ஸஹாபிகளில் ஒருவர் கொல்லப்பட்டவர்களுடன் காயமடைந்த நிலையில் இருந்ததால் அவர் அங்கிருந்து தப்பித்தார். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அவர் ஹஸ்ரத் கஅப் பின் உமைர் (ரலி) ஆவார் என்று கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும், எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், இரவு குளிர்ந்ததும் அவர் பயணித்து பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார். அன்னார் மிகவும் வருந்தினார்கள். அன்னார் (ஸல்) அப்போதே அம்மக்களை நோக்கி ஒரு படையை அனுப்ப எண்ணம் கொண்டார்கள். ஆனால் அம்மக்கள் அந்த இடத்தை விட்டு விலகி எங்கோ சென்று விட்டார்கள் என்று அன்னாருக்கு தெரிய வந்தபோது அந்த எண்ணத்தை தள்ளி வைத்து விட்டார்கள்.

முஃதா போர் (பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது). இது ஜமாதியுல் ஊலா மாதத்தில் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு அதாவது கி.பி 629-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்தது. முஃதா என்பது சிரியாவின் எல்லைப் பகுதியில் பல்கா எனும் பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பாகும். மதீனாவில் இருந்து ஏறக்குறைய 600 மைல் தொலைவில் இருந்தது. இந்த போர் ஜைஷுல் உமரா போர் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த படை புறப்படுவதற்கு முன்பு அதற்கு ஒன்றை விட அதிகமான தளபதிகளை நியமித்தார்கள். இந்த போருக்கான காரணம் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் (ரலி) அவர்களிடம் தம் கடிதத்தை கொடுத்து அவர்களை புஸ்ராவுடைய ஆளுநரிடம் தூதுவராக அனுப்பி வைத்தார்கள். அவர் முஃதா என்ற இடத்தை அடைந்தபோது ஷுரஹ்பீல் பின் அம்ர் கஸ்ஸானி என்பவன் அவரிடத்தில் வந்து எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டான். சிரியாவுக்கு செல்கிறேன் என்று அவர்கள் கூறினார்கள். நீங்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுவரா? என்று கேட்டான். அதற்கு, ஆம்! நான் அன்னாருடைய தூதர் தான் என்று அவர்கள் கூறினார்கள். ஷுரஹ்பீலுடைய கட்டளைக்கிணங்க அவர் பிடிக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டார். இவரை பிடியுங்கள் என்று அவன் தம் கூட்டாளகளிடத்தில் கூறியபோது அம்மக்கள் அவரை பிடித்து கட்டி வைத்தார்கள். அவரை ஷுரஹ்பீல் ஷஹீது ஆக்கிவிட்டான். இது பற்றிய செய்தி கிடைத்த உடன் அன்னார் (ஸல்) மிகுந்த வேதனை அடைந்தார்கள். அன்னார் (ஸல்) ஸஹாபிகளை அழைத்து ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் (ரலி) அவர்களின் ஷஹாதத்தை குறித்தும் அவர்களை ஷஹீதாக்கிய மக்களை குறித்தும் தெரிவித்தார்கள். இதனாலேயே இந்த போர் ஏற்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த போருக்கான காரணத்தைக் குறித்தும் இதன் பின்னணியை குறித்தும் எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவுக்குச் சென்று திரும்பி வந்தபோது யூதர்களின் தூண்டுதலாலும் நிராகரிப்பாளர்களின் தூண்டுதலாலும் சிரியா நாட்டின் எல்லைப் பகுதியிலுள்ள அரபு இனக் கிறிஸ்தவர்கள், மதீனாவைத் தாக்குவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. எனவே அவர்கள் இந்தத் தகவல்கள் எந்த அளவிற்கு உண்மையானவை என்பதைத் தெரிந்து வருமாறு பதினைந்து பேரைக் கொண்ட ஒரு குழுவினைச் சிரியா எல்லைக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சிரியா நாட்டு எல்லையை அடைந்ததும், ஒரு படை திரண்டு கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் திரும்பி வந்து இந்தச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவிப்பதற்குப் பதிலாக அவர்கள் மிகுந்த துணிச்சலுடன் முன்னேறிச் சென்று அந்தப் படையினர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைக்கத் தொடங்கி விட்டனர். ஏனெனில், இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைப்பதில் மிகுந்த ஆர்வங் கொண்டிருப்பது உண்மையான நம்பிக்கையாளர்களின் அடையாளமாக இருந்தது. பகைவர்களால் தூண்டிவிடப்பட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நகரத்தைத் தாக்கி அதனை வெற்றி கொள்ள விரும்பிய அம்மக்கள், நபித் தோழர்கள் செய்த ஏகத்துவப் போதனையால் எந்தப் பயனும் பெறவில்லை.

தப்லீஃக்கால் அவர்கள் மீது எவ்வித தாக்கமும் ஏற்படாத நிலை இருந்தது.

அம்மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி நபித் தோழர்கள் போதிக்கத் தொடங்கியதும் அவர்கள் நாலாப் புறமிருந்தும் நபித் தோழர்கள் மீது அம்பெய்யத் தொடங்கிவிட்டனர். தாங்கள் செய்த தப்லீஃக்கிற்கு சான்றுகள், ஆதாரங்கள் மூலமாக பதில் தருவதற்கு பதிலாக அம்மக்கள் தங்கள் மீது அம்பெய்து கொண்டிருப்பதை முஸ்லிம்கள் கண்டபோது அவர்கள் வெருண்டோடவோ ஆயிரக்கணக்கானவர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்திலிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவோ முயலவில்லை. மாறாக, உண்மையான முஸ்லிமாக அந்தப் பதினைந்து பேரும் மிக்க உறுதியுடன் ஆயிரக்கணக்கானவர்களை எதிர்த்து நின்று அங்கேயே ஷஹீதானார்கள்.

பெயர் தாங்கி முஸ்லிம்கள் இன்று அஹ்மதிகளுடனும் இதே நடைமுறையைத்தான் மேற்கொள்கிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றொரு படையை அனுப்பி இத்தகு மிகக் கொடிய செயலைச் செய்த அவர்களுக்குத் தண்டனை வழங்க விரும்பினார்கள். ஆனால், சிரியா எல்லையில் திரண்டு கொண்டிருந்த அந்தப் படையினர் அங்கிருந்து சிதறிச் சென்று விட்டதாக அந்தச் சமயத்தில் அன்னாருக்குத் தகவல் கிடைத்ததால் அந்த விருப்பத்தைச் சிறிது காலத்திற்கு ஒத்தி வைத்துவிட்டார்கள். அதேவேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ரோமானிய அரசு சார்பாக புஸ்ராவில் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த கஸ்ஸான் கோத்திரத் தலைவருக்கோ அல்லது ரோமானிய அரசர் கைசருக்கோ, சிரியாவிலுள்ள சில கோத்திரங்கள் இஸ்லாமியப் பகுதியின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன ; அவர்கள் எந்தக் காரணமுமின்றி பதினைந்து முஸ்லிம்களைக் கொன்று விட்டனர் என்று மேற்கூறப்பட்ட இச்சம்பவத்தை முறையீடாக அநேகமாக அக்கடிதத்தில் குறிப்பிட்டார்கள்.

அந்தக் கடிதம் அல்ஹாரிஸ் எனும் ஒரு நபித்தோழர் மூலம் அனுப்பப்பட்டது. சிரியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர் வழியில் முஃதா எனும் ஓரிடத்தில் தங்கினார். அங்கு கைசர் மன்னரால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுள் ஒருவரான கஸ்ஸான் கோத்திரத் தலைவன் ஷர்ஜீல் என்பவன் அவரைச் சந்தித்து, நீங்கள் எங்கே போகிறீர்கள்? நீங்கள் முஹம்மது அவர்களின் தூதரா? என்று கேட்டான்.

என்னைப் பொருத்த வரை இங்கு எழுத்துப் பிழை இருப்பதாக நினைக்கிறேன். உண்மையான பெயர் ஷுரஹ்பீல் என்பதாகும்.

இதற்கு அவர் ஆம்! என்று கூறியதும், அவன் அவரைக் கைது செய்து கயிற்றால் கட்டி அடித்துக் கொன்று விட்டான். இந்த நிகழ்ச்சி பற்றி வரலாற்றில் விரிவாக எழுதப்படவில்லையென்றாலும் எந்தப் படையினர் இதற்கு முன்னர் பதினைந்து நபித்தோழர்களைக் கொன்றனரோ அந்தப் படையினரின் தலைவர்களுள் ஒருவனாக அவன் இருந்திருப்பான் என்று இந்த நிகழ்ச்சி தெரிவிக்கிறது. எனவே நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுவரைச் சார்ந்தவரா? என்று அவன் அன்னாரிடத்தில் கேள்வி கேட்டது இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது அவனுக்கு இந்த அச்சம் இருந்தது. மன்னர் கைஸரிடம், உமது பகுதியிலுள்ள மக்கள் எங்கள் பகுதியிலுள்ள மக்களைத் தாக்குகின்றனர் என்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் புகார் செய்து விடுவார்கள் என்ற அச்சம் அவனுக்கு இருந்தது. இதனால் மன்னர் தம்மை விசாரிப்பார் என்றும் அவன் பயந்தான். அந்தத் தூதுச் செய்தி மன்னருக்குக் கிடைக்காமல் இருக்கவும் தூதுவரை கொன்று விடுவதில்தான் தனக்கு நன்மையிருக்கின்றது என்று அவன் கருதினான் ஆனால், அவனுடைய தீய எண்ணங்களை இறைவன் நிறைவேறவிடவில்லை. ஹாரிஸ் அவர்கள் கொல்லப்பட்ட செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்து விட்டது. இதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவத்திற்கும் இப்பொழுது நிகழ்ந்த சம்பவத்திற்கும் தண்டனை வழங்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மூவாயிரம் பேரைக் கொண்ட ஒரு படையை ஆயத்தமாக்கினார்கள். அன்னாரால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமையான ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் சிரியாவை நோக்கி அந்த படை

அனுப்பப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த படைக்கு தளபதிகளை நியமித்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. அன்னார் (ஸல்) ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை 3000 நபர்களைக் கொண்ட படைக்கு அமீராக நியமித்தார்கள்.

ஸைது ஷஹீது ஆகிவிட்டால், ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) தளபதியாக இருப்பார். ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) ஷஹீது ஆகிவிட்டால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா தளபதியாக இருப்பார். அவரும் ஷஹீதாகி விட்டால் முஸ்லிம்கள் தங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் தளபதியாக்கிக் கொள்ள வேண்டும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நுஃமான் எனும் பெயர் கொண்ட ஓர் யூதரும் அங்கு இருந்தார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அபுல் காஸிம் அவர்களே! - யூத மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களை இந்த பெயரால் அழைத்து வந்தார்கள் - தாங்கள் உண்மையான நபி என்றால் தாங்கள் எந்தெந்த நபர்களுடைய பெயரை எடுத்துக் கூறினீர்களோ அவர்கள் அனைவரும் ஷஹீது ஆகிவிடுவார்கள். பனீ இஸ்ராயீலின் நபிமார்கள் ஒரு நபரை சமுதாயத்தின் அமீராக நியமிக்கும் போது, இவர் கொல்லப்பட்டால் இன்ன நபர் அமீராக இருப்பார் என்று 100 நபர்களுடைய பெயர்களை எடுத்துக் கூறினாலும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விடுவார்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்த ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களைப் பார்த்து, ஸைதே! நீங்கள் உயில் எழுதி விடுங்கள்! முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான நபி என்றால், நீங்கள் ஒருபோதும் உயிருடன் திரும்பி வரமாட்டீர்கள் என்றார். இதற்கு ஸைது (ரலி) அவர்கள், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையான தூய இறைத் தூதராவார்கள் என்று நான் சாட்சி அளிக்கிறேன் என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தளபதிகளை நியமித்துக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய பெற்றோர் தங்கள் மீது அர்ப்பணம்; தாங்கள் என் மீது ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களை அமீராக நியமிப்பீர்கள் என்று நான் கருதவில்லை; நானோ உயர்வான குடும்பத்தைச் சார்ந்தவனாவேன்; என்னை நியமிக்கவில்லையே என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்) நீங்கள் செல்லுங்கள். சிறந்தது எது? என்று உங்களுக்குத் தெரியாது என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம், ஒரு வெள்ளை நிற கொடியைக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம், நீங்கள் ஹாரிஸ் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதாகிய இடத்திற்கு செல்லுங்கள். அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது; இல்லையென்றால் அவர்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் உதவி வேண்டியவாறு அவர்களுடன் போர் செய்யுங்கள் என்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை வழி அனுப்பியும் வைத்தார்கள்; அறிவுரையும் வழங்கினார்கள்.

இது பற்றிய விளக்கம் இவ்வாறு வருகிறது: மக்கள் ஆயத்தமாகி புறப்பட்டார்கள். மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்த ஜுரஃப் எனும் இடத்தில் படை ஒன்று கூடியது. அன்னாரும் அவர்களை வழி அனுப்பி வைப்பதற்காக ஸனியத்துல் விதா எனும் இடம் வரை சென்றார்கள்.

போருக்காக புறப்படுவதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படைக்கு வழிகாட்டல்களை வழங்கியவாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுமாறும், உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வை மறுப்பவர்களுடன் போரிட செல்லுங்கள். நீங்கள் ஏமாற்றக் கூடாது; மோசடி செய்யக் கூடாது; பால் அருந்தும் எந்த ஒரு குழந்தையையும் கொலை செய்யக் கூடாது; எந்த ஒரு பெண்ணையும் வயதானவரையும் கொல்லக் கூடாது; எந்த ஒரு பேரிச்சம் மரத்தையும் வெட்டக் கூடாது; எந்த அளவுக்கென்றால், எந்தவொரு மரத்தையும் வெட்டக் கூடாது; எந்த ஒரு கட்டடத்தையும் இடிக்கக் கூடாது என்று கூறினார்கள்.

அத்துடன் அந்த படையின் தளபதியிடம், நீங்கள் ஓர் இணை வைப்பாளரை சந்திக்கும் போது, மூன்று விஷயங்களில் ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவருக்கு அழைப்புக் கொடுங்கள். அதில் ஒன்றை அவர் ஏற்றுக் கொண்டால் அதை ஒப்புக் கொள்ளுங்கள். மேற்கொண்டு அவருக்கு துன்பம் கொடுக்காதீர்கள். அவர் தம் நகரத்தை விட்டுவிட்டு முஹாஜிர்களுடைய நகரத்திற்கு இடம் மாறி வந்துவிட வேண்டும் என்று அவருக்கு அழைப்பு கொடுங்கள். அவ்வாறு அவர் செய்து விட்டால் முஹாஜிர்களுக்கு என்ன இருக்குமோ அதுவே அவர்களுக்கும் பொருந்தும் என்றும், முஹாஜிர்கள் மீது எது நிர்ணயிக்கப்படுமோ அது அவர்களுக்கும் இருக்கும் என்றும் அவர்களிடம் கூறிவிடுங்கள்.

அவர்கள் இதை மறுத்து விட்டால் அவர்கள் முஸ்லிம்களை விட்டு விலகி பாலைவனங்களை நோக்கி சென்றுவிட வேண்டும் என்று கூறுங்கள். அதாவது கிராமங்களுக்கு சென்று விட வேண்டும். மற்ற முஸ்லிம்களை குறித்து அல்லாஹ்வின் கட்டளை என்ன உள்ளதோ அதுவே அவர்களுக்கும் பொருந்தும். ஆனால், அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து போரில் கலந்து கொள்ளாத வரை அவர்களுக்கு போர்ச் செல்வமோ ஃபே எனப்படும் போர்ச் செல்வமோ கிடைக்காது. அவர்கள் இதையும் மறுத்து விட்டால் அவர்களிடம் ஜிஸ்யா வரியை கேளுங்கள். அவர்கள் இதை ஒப்புக் கொண்டால் அவர்களிடம் இருந்து அதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களுக்கு துன்பம் கொடுப்பதை விட்டு விலகிக் கொள்ளுங்கள். அவர்கள் இதையும் மறுத்து விட்டால் அவர்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள் ; அவர்களுக்கு எதிராக போர் செய்யுங்கள். நீங்கள் ஏதேனும் ஒரு கோட்டையையோ நகரத்தையோ முற்றுகையிடும் போது அவர்கள் உங்களிடம், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரில் அடைக்கலம் கேட்டால் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரில் நிர்ணயித்துக் கொள்ளாதீர்கள். அதாவது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரால் ஒப்பந்தம் செய்து கொள்ளாதீர்கள். மாறாக உங்கள் பெயராலும் உங்களுடைய மூதாதையர்கள் பெயராலும் நிர்ணயித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களது உடன்படிக்கைகளையும் உங்களது முன்னோரின் உடன்படிக்கைகளையும் முறிக்க வேண்டியது வந்தால் இது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரில் செய்யப்பட்ட உடன்படிக்கையை முறிப்பதை காட்டிலும் அதிக இலகுவான விஷயமாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விபரத்தை இவ்வாறு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: இந்தப் படைக்கு ஸைது பின் ஹாரிஸா தளபதியாக இருப்பார். அவர் கொல்லப்பட்டால், ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) தளபதியாக இருப்பார். அவரும் கொல்லப்பட்டால் அப்துல்லாஹ் பின் ரவாஹா தளபதியாக இருப்பார். அவரும் கொல்லப்பட்டால் முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் தளபதியாக்கிக் கொள்ள வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அப்போது அந்தக் கூட்டத்தில் ஓர் யூதரும் அமர்ந்திருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அபுல் காஸிம் அவர்களே! தாங்கள் உண்மையாளராக இருந்தால், இம்மூவரும் நிச்சயமாகக் கொல்லப்படுவார்கள். ஏனெனில், இறைவன் தனது நபிமார்களின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளை நிறைவேற்றி விடுகின்றான் என்று கூறிவிட்டு, அங்கிருந்த ஸைது (ரலி) அவர்களைப் பார்த்து, நான் உங்களிடம் உண்மையாகவே ஒன்றைக் கூறிவிடுகிறேன். முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான நபி என்றால், நீங்கள் ஒருபோதும் உயிருடன் திரும்பி வரமாட்டீர்கள் என்றார். இதற்கு ஸைது (ரலி) அவர்கள், நான் திரும்பி வந்தாலும் வராவிட்டாலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதுரேயாவார்கள் என்று பதிலளித்தார்கள்.

மறுநாள் காலையில் அந்தப் படை புறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் ஸஹாபிகளும் அந்தப் படையை வழியனுப்பி வைக்கச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் அவர்களின் தலைமையில்லாமல் இவ்வளவு பெரிய படை எந்தவொரு முஸ்லிம் தளபதியின் தலைமையிலும் மிக முக்கியமான பணிக்காகச் சென்றதில்லை. அந்தப் படையை வழியனுப்புவதற்காக அதனுடன் சென்று கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் படையினருக்கு அறிவுரைகள் கூறிக் கொண்டே சென்றார்கள்.

இறுதியாக மதீனாவுக்கு வெளியே ஓரிடத்தில் எந்த இடத்திலிருந்து அவர்கள் (தங்களின் ஹிஜ்ரத்தின் போது) மதீனாவிற்குள் நுழைந்தார்களோ மேலும் பொதுவாக எந்த இடத்திலிருந்து மதீனாவாசிகள் தங்கள் விருந்தினர்களை வழியனுப்பிக் கொண்டிருந்தனரோ அந்த இடத்தில் அவர்கள் நின்று, அந்தப் படையினர்களுக்கு இவ்வாறு அறிவுரைகள் கூறினார்கள்;

நீங்கள் எப்போதும் இறையச்சத்துடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுடனுள்ள முஸ்லிம்களிடம் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இறைவனை நினைவு கூர்ந்தவாறு போர்க் களம் சென்று, உங்களுக்கும் இறைவனுக்கும் பகைவர்களாகிய சிரியாவிலுள்ளவர்களுடன் போர் புரியுங்கள். நீங்கள் சிரியாவை அடைந்ததும் அங்கு வணங்குமிடங்களில் அமர்ந்து இறைவனை தியானம் செய்து கொண்டிருப்பவர்களை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் அவர்களிடம் எந்தக் குறுக்கீடும் செய்யக் கூடாது; அவர்களைத் துன்புறுத்தக் கூடாது; பகைவர்களின் நாட்டிலுள்ள எந்தப் பெண்ணையும் கொல்லக் கூடாது; எந்தப் பிள்ளைகளையும் கொல்லக் கூடாது; எந்த முதியவரையும் கொல்லக் கூடாது; எந்த மரத்தையும் வெட்டக் கூடாது; எந்தக் கட்டடத்தையும் இடிக்கக் கூடாது; இவ்வாறு அறிவுரை கூறிவிட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்து திரும்பினார்கள். இஸ்லாமியப் படை சிரியாவை நோக்கி புறப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இன்னோர் இடத்தில் இதன் விளக்கத்தை எழுதியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

முழு சம்பவத்தையும் எடுத்துரைத்த பிறகு கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் ஞானத்திற்கேற்ப அந்த சம்பவம் முற்றிலும் அவ்வாறே நிகழ்ந்தது. அதாவது ஷஹீதாகக் கூடிய தளபதிகளை குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்களோ அது அவ்வாறே நிகழ்ந்தது. முதலில் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் ஷஹீது ஆனார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் படையின் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள். அவர்களும் ஷஹீது ஆனார்கள். அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் படையின் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அவர்களும் கொல்லப்பட்டார்கள். விரைவில் இஸ்லாமியப் படை சிதறுண்டு போகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் சில முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கிணங்க இஸ்லாமிய கொடியை தமது கையில் பிடித்துக் கொண்டார்கள். அல்லாஹ் இவர்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு வெற்றி வழங்கினான். அவர்கள் நலமுடன் படையை அழைத்துக் கொண்டு திரும்ப வந்தார்கள்.

இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்கிறது; இன்ஷா அல்லாஹ். இனி எதிர்வரும் காலத்திலும் தொடரும்.

இப்போது நான் ஒரு ஷஹீதைப் பற்றியும், சில மர்ஹூம்களின் நற்குறிப்பைப் பற்றியும் எடுத்துரைக்க விரும்புகிறேன். இவர்களின் ஜனாஸா தொழுகையை வெளியே தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

கடந்த வாரம் கராச்சியில் லயீக் அஹ்மத் சீமா ஸாஹிப் என்பவர் ஷஹீது ஆக்கப்பட்டார். இவர் சவுத்ரீ நஸீர் அஹ்மத் சீமா ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். ஏப்ரல் 18 ஆம் தேதி ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள்.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

ஒரு கும்பல் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி மிகவும் கொடூரமான முறையில் ஷஹீதாக்கியுள்ளது. மர்ஹூமுடைய வயது 47 ஆக இருந்தது. விவரத்தின் அடிப்படையில் சம்பவம் நிகழ்ந்த நாளில் ஜமாஅத்தின் எதிர்ப்பாளர்கள் ஊர்வலமாக அஹ்மதிய்யா ஹாலுக்கு வெளியே ஒன்றுகூடி கூச்சல் குழப்பத்தை விளைவிப்பதாக தகவல் கிடைத்தது. சூழ்நிலையை அறிந்து வருவதற்காக அன்றைய வெள்ளிக்கிழமையன்று மதிப்பிற்குரிய லயீக் அஹ்மத் சீமா ஸாஹிப் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் அந்த இடத்தை சென்றடைந்தார்கள். எதிரிகள் லயீக் அஹ்மத் சீமா ஸாஹிப் அவர்களை அடையாளம் கண்டு கொண்டார்கள். அவர்கள் மீது தாக்குதல் நடத்தி கொஞ்சம் தூரத்தில் இருந்த நான்கு வழிச் சாலை சந்திக்குமிடம் வரை அவரை தரையில் இழுத்துச் சென்றார்கள். அங்கு கொண்டு சென்ற பிறகு செங்கலை கொண்டும் கற்களைக் கொண்டும் அடித்து அவர்களை கொடூரமான முறையில் ஷஹீதாக்கி இருக்கின்றார்கள். உயிர் பிரியும் நிலையில் அங்கு அவர்கள் இருந்தபோது ஒரு கடைக்காரர் அவருக்கு தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சித்தபோது தண்ணீர் கொடுப்பதை விட்டு அவரையும் வலுக்கட்டாயமாக தடுத்து விட்டனர். சம்பவம் நிகழ்ந்து அரை மணி நேரத்தை விடவும் அதிக நேரம் கழிந்த பிறகுதான் அந்த இடத்திற்கு காவல்துறை வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகு மையத் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவர்களது மரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஷஹீது மர்ஹூமுடைய குடும்பத்தில் அவருடைய கொள்ளு தாத்தா மதிப்பிற்குரிய சவுத்ரீ ஹாக்கிம் அலி ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் முதலாவது கிலாஃபத்துடைய காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையக் கூடிய நல்வாய்ப்பு பெற்றார்கள். அவர்கள் பஹாவல் மாவட்டத்தில் சிஷ்தியான் எனும் ஊரைச் சார்ந்தவர் ஆவார்கள். ஷஹீது மர்ஹூமுடைய படிப்பு அதிகம் ஒன்றும் கிடையாது. ஆனால், தன்னுடைய ஓர்க்ஷாப் ஒன்றை அவர்கள் வைத்திருந்தார்கள். வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை பழுது பார்க்கக் கூடிய வேலை செய்து வந்தார்கள். அவர்களுடைய இந்த ஓர்க் ஷாப் தொழில் மிகவும் விரிவடைந்திருந்தது. அவருடைய நற்பெயர் மற்றும் புகழின் காரணமாக பல்வேறு அரசாங்க துறைகளும் தம்முடைய வாகனங்களை இவர்கள் மூலமாகவே பழுது பார்த்து வந்தன. இதன் காரணமாக இவர்களுடைய சமூகத் தொடர்புகளும் மிகவும் விரிவானதாக இருந்தன. அல்லாஹ்வின் அருளால் ஷஹீத் அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஜமாஅத் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும், (ஜமாஅத்) தொண்டுகளுக்காகவும் எப்போதும் ஆயத்தமாக இருப்பார்கள். தஹஜ்ஜுத் மற்றும் ஐவேளை தொழுகைகளை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். பிள்ளைகளை ஜமாஅத்தாக தொழுவதற்காக முறையாக தம்முடன் அழைத்துச் செல்வார்கள். ஓர்க் ஷாப்பில் பணியாற்றக் கூடிய அஹ்மதி பணியாளர்கள் மற்றும் (தம்) குடும்ப உறுப்பினர்களின் தொழுகையை நிறைவேற்றுதலையும் கண்காணித்து வந்தார்கள். எந்த அளவு வேலைப் பளு அதிகமாக இருந்தாலும் வேலையிலேயே மூழ்கியிருக்காமல் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்து வந்தார்கள்.

இவ்வாறான வேலையை செய்யக் கூடியவர்கள் இந்த அளவுக்கு வேலைப் பளு உள்ளவர்கள் பொதுவாக தொழுகைகளில் கவனம் செலுத்துவது கிடையாது. ஆனால், இவர்கள் ஒருபோதும் தொழுகையை விட்டது கிடையாது. எளிதில் பழகக் கூடியவராகவும், நேசிக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் அன்னியோன்னியமாக பழகுவார்கள். கிலாஃபத்துடன் ஒரு சிறப்பான தொடர்பு இருந்தது. எம்.டி.ஏ நிகழ்ச்சிகளில் குறிப்பாக என்னுடைய குத்பாவை கண்டிப்பாக கேட்டு வந்தார்கள். ஜமாஅத்துடைய (நீதிமன்ற) வழக்குகள் தொடர்பாகவும், அதில் டியூட்டி கொடுப்பதற்காகவும் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்து வந்தார்கள்.

ஷஹாதத் சம்பவத்திற்கு இரு நாட்கள் முன்பும் கூட நீதிமன்றத்தில் எதிரிகள் சார்பாக மிகவும் ஆக்ரோஷமான முறையில் மிரட்டல்கள் கொடுக்கப்பட்டன. இவர்களுக்கு முன்பும் கூட மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வந்தன. திருக்குர்ஆனுடன் அளவற்ற நேசம் இருந்தது. முதலில் இவருக்கு நன்கு திருக்குர்ஆன் ஓத தெரியாமல் இருந்தது. ஆனால் பெரிய வயதை அடைந்த பிறகு அவர்கள் திருக்குர்ஆன் ஓத கற்றுக் கொண்டார்கள். பிறகு நிரந்தரமாக அதை ஓதியும் வந்தார்கள். அதனுடைய ரெக்கார்டிங்கையும் கேட்டு வந்தார்கள். அவருடைய ஓர்க் ஷாப்பில் திருக்குர்ஆன் ரெக்கார்டிங் ஒலித்துக் கொண்டிருக்கும்.

ஷஹாதத் சம்பவத்திற்கு முன் நண்பர் ஒருவர் இவரிடம் தம் நோயை சுட்டிக்காட்டி இரத்த தானத்திற்கான ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் வைத்திருந்தார். அதற்கு ஷஹீது மர்ஹூம் அவர்கள் பதிலளிக்கும்போது ஜுமுஆ தொழுகைக்கு பிறகு நானே வந்து உங்களுக்கு ரத்ததானம் வழங்குகிறேன் என்று கூறியிருந்தார். ஆனால், இறைவனோ வேறொன்றை நடத்த இருந்தான். அல்லாஹ் இவர்களுக்கு ஷஹாதத் எனும் அந்தஸ்தை வழங்கிவிட்டான்.

மர்ஹூம் அவர்களுக்கு இரு மனைவிகள் உள்ளனர். முதலாவது மனைவி மர்யம் லயீக் ஸாஹிபா கூறுகிறார்: என்னுடைய தேவைகளை கருத்தில் கொள்வார்கள். குழந்தைகளுக்கு நல்ல முறையில் தர்பிய்யத் வழங்கி வந்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் அதிகமாக கவனமூட்டி வந்தார்கள்.

இரண்டாவது மனைவி கூறுகிறார்: முதல் மனைவியையும் என்னையும் எந்த அளவு கருத்தில் கொண்டார்கள் என்றால் நாங்கள் இரு சகோதரிகளைப் போன்று இருந்தோம். மர்ஹூமுக்கு உலகக் கல்வி குறைவுதான். ஆனால் பொது அறிவு அதிகமாக இருந்தது. அவர்களது பேசு பொருள் பெரும்பாலும் நபிமார்களை பற்றியதாக இருக்கும். பல்வேறு விஷயங்களில் எனக்கும் அவர்கள் தர்பிய்யத் வழங்கி வந்தார்கள்.

இரண்டாவது மனைவியின் பெயர் ஃபரஹ் லயீக் என்பதாகும். அவர் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் எனக்கும் தர்பிய்யத் வழங்கி வந்தார்கள். என்னுடைய பெற்றோர்களே எனக்கு இந்த அளவு தர்பிய்யத் கொடுத்தது கிடையாது. ஆனால் என்னுடைய கணவர் திருமணத்திற்கு பிறகு இரு வருடங்களில் எனக்கு அந்த அளவு தர்பிய்யத் வழங்கி இருந்தார்!

ஷஹீது மர்ஹூமுடைய சகோதரர் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் ஷஹாதத் கிடைப்பது பற்றி மீண்டும் மீண்டும் பேசி வந்தார். இந்த அருள் நற்பேறு கொண்டவர்களுக்கே கிடைக்கும் என்று கூறிவந்தார். தாம் தியாகம் செய்வதற்கான நேரம் வரும்போது நெஞ்சில் குண்டடி வாங்கிக் கொள்வேன் என்று பெரும்பாலும் கூறிவந்தார். எந்த அளவு எதிர்ப்பான சூழ்நிலை இருந்தாலும், எப்பொழுதும் பள்ளிவாசலுக்கு சென்று தொழ வேண்டும் என்று தம் சகோதரர்களுக்கு கூறி வந்தார்கள். ஏனெனில், இந்த நேரம்தான் துணிவை காட்ட வேண்டிய நேரம் என்று கூறிவந்தார்கள்.

மர்ஹூமுடைய மகன் ஹிஸ்கீல் அஹ்மதின் வயது 12 ஆகும். அவர் கூறுகிறார்: பயப்படக் கூடாது என்று என் தந்தை எனக்கு அறிவுரை கூறியிருந்தார். ஆகவே என் தந்தை ஷஹீதானதை கண்டு நான் ஒருபோதும் அஞ்சவில்லை.

அந்த சிறுவன் மிகுந்த துணிவையும், தைரியத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார். மிகுந்த பொறுமையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

நானும் எனது தந்தையைப் போன்று துணிவுள்ளவன் ஆவேன். நெஞ்சில் குண்டடி வாங்குவதற்கு ஆயத்தமாக உள்ளேன் என்று கூறியுள்ளார்.

மர்ஹூம் அவர்கள் இரு மனைவிகளையும், ஏழு குழந்தைகளையும், ஒரு சகோதரியையும் பின்விட்டுச் சென்றுள்ளார்கள். ஒரு தம்பியும் இருக்கிறார். மூத்த மகளுடைய வயது 17 ஆகும். ஒன்றரை வயதில் ஒரு மகளும் உள்ளார். மர்ஹூம் அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் தம் மனைவியிடம், இன்னொரு மகன் பிறக்க இருப்பதாக தாம் கனவில் கண்டதாக கூறியுள்ளார்.

இரண்டாவது மனைவி கூறுகிறார்: நான் டெஸ்ட் செய்து பார்த்தபோது எனக்கும் அல்லாஹ் சந்ததியை வழங்க இருப்பதை தெரிந்து கொண்டேன்.

அப்பகுதியின் முரப்பியான தவ்ஸீஃப் ஸாஹிப் கூறுகிறார்கள்: மர்ஹூம் அவர்கள் தொழுகை மையத்திற்கு வந்து ஐவேளை தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், நஃபிலான இறை வணக்கங்களை நிறைவேற்றக் கூடியவராகவும், கிலாஃபத்திற்கு கட்டுப்படக் கூடியவராகவும், ஏழைகளை கருத்தில் கொள்ளக் கூடியவராகவும் , அல்லாஹ்வுடைய உரிமைகள் மற்றும் அல்லாஹ்வின் அடியார்களுடைய உரிமைகள் ஆகியவற்றை இயன்ற அளவு செலுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடியவராக இருந்தார்கள். சாலையில் தேவையுடையவர்களுக்கு ஏதாவது உதவி தேவை என்றால் உடனடியாக உதவி செய்யக் கூடியவராக இருந்தார்கள். சாலையில் எவருடைய வாகனமாவது பழுதடைந்து இருப்பதைப் பார்த்தால் அங்கு நின்று அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். இறை இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார்கள். தம்முடைய ஒவ்வொரு வேலையையும், வெற்றியையும் இறை அருளின் விளைவு என்றே கருதி வந்தார்கள். சூழ்நிலை எந்த அளவு நெருக்கடியாக இருந்த போதிலும், எதிர்ப்பு இருந்தபோதிலும் எப்போதும் தொழுகைகளை குறித்த நேரத்தில் தொழுகை மையத்திற்கு வந்து ஜமாஅத்தாக நிறைவேற்றி வந்தார்கள். மென்மையான இயல்புடையவர்களாக இருந்தார்கள். யாராவது கோபத்தில் எதையாவது பேசினால் அமைதியாக இருப்பார்கள். திரும்ப அவருக்கு பதிலடி கொடுக்க மாட்டார்கள். மாறாக, சிரித்தவாறு அந்த சபையை விட்டு சென்று விடுவார்கள்.

செகரட்டரி மால் அல்லது சத்ர் ஜமாஅத் கூறுகிறார்: ஒருமுறை எங்களது கணக்கு வழக்கு தவறாக இருந்தது. நாங்கள் மர்ஹூமிடம் தவறுதலாக உங்களுக்கு சந்தா பாக்கி உள்ளது என்று கூறினோம். அவர் ஒன்றும் கேட்கவில்லை ; அதை அவர்கள் செலுத்தி விட்டார்கள். பெரும் தொகையாக இருந்தது. எங்களது கணக்கு வழக்கில் தவறு இருந்தது; உங்களுக்கு எந்த பாக்கியும் இருக்கவில்லை. நீங்கள் அதிகமாக செலுத்தி விட்டீர்கள் என்று பிறகு நாங்கள் அவருக்கு தகவல் தெரிவித்தபோது, பரவாயில்லை. நான் இறைவழியில் கொடுத்து விட்டேன். அதை திரும்ப வாங்க மாட்டேன் என்று

கூறிவிட்டார்.

மனைவி மக்களுடன் வெளிநாட்டுக்கு இடம் பெயர விரும்பி இருந்தார். முழுமையாக ஆயத்தம் மேற்கொண்டிருந்தார். அறிவிக்கக் கூடியவர் கூறுகிறார்: ஒரு நாளுக்கு முன்பு அவர் என்னிடம் கூறும் போது, நாங்கள் வெளிநாட்டுக்கு இடம் பெயர இருக்கிறோம். அங்கு மார்க்க சுதந்திரம் உள்ளது. குழந்தைகளுக்கு பாங்கும், தக்பீரும் உரத்த குரலில் அழகிய முறையில் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு விருப்பம் உள்ளது. அங்கு சென்ற பிறகு நாங்கள் வீட்டில் ஜமாஅத்தாக தொழுவோம்; முறையாக பாங்கு கொடுத்த பிறகு தொழுகையை நிறைவேற்றுவோம் என்று கூறினார்.

அல்லாஹ் ஷஹீதுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களுடைய மனைவி மக்களையும் தம் பாதுகாப்பில் வைப்பானாக. எதிரியை பிடிப்பதற்கான விரைவான ஏற்பாட்டை உருவாக்குவானாக. இன்றும் ஒரு தகவல் கிடைத்துள்ளது. கஸூர் எனும் ஒரு கிராமத்தில் அஹ்மதி இளைஞர் ஒருவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார் என்று. விவரங்கள் இன்னும் வந்தடையவில்லை. அல்லாஹ் அநியாயக்காரர்களை விரைவில் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக. அவர்களுக்கு இப்பொழுது,

اَللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ
وَسَحِّقْهُمْ تَسْحِيْقًا

என்ற இ(ந்த)து (ஆ)தான்.

இரண்டாவது நற்குறிப்பு. டாக்டர் மஸ்வூதுல் ஹஸன் ஸாஹிபின் மனைவியாகிய அமத்துல் முஸவ்விர் நூரி ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் மரணமடைந்து இருக்கிறார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் வழிப் பேத்தியும், ஹஸ்ரத் நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் ஸாஹிபா அவர்களின் மகள் வழிப் பேத்தியும், மிர்ஸா தாவூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகளும் ஆவார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்கள் என் தந்தையின் சகோதரருடைய மகள் என்ற முறையில் எனக்கு சகோதரியாகவும் இருந்தார்கள்.

டாக்டர் மஸ்வூதுல் ஹஸன் ஸாஹிப் கூறுகிறார்கள்: எங்களுடைய திருமண பேச்சை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களே பேசி முடித்தார்கள். ஹுஸூர் அவர்கள், அவரிடமும் கேட்கவில்லை ; அவருடைய பெற்றோரிடமும் கேட்கவில்லை. என்னுடைய தந்தையிடம், அவருக்கு நான் திருமணம் நடத்தி வைக்கட்டுமா? என்று என்னைக் குறித்து கேட்டார்கள். அச்சந்தர்ப்பத்தில் கர்னல் தாவூத் ஸாஹிப் மற்றும் அவர்களின் மனைவியிடம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த வரனை கொண்டு வந்தபோது, நாங்கள் சில நாட்கள் இஸ்திஃகாரா செய்கிறோம் என்று அவர்கள் வேண்டினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நான் இஸ்திஃகாரா செய்து விட்டேன். இனி மேற்கொண்டு இஸ்திஃகாரா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. திருமணத்தை நடத்தி வையுங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், திருமணம் நடைபெற்றது. அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் அருளால் 51 வருட மணவாழ்க்கை மிகவும் அன்புடனும், நேசத்துடனும், கட்டுப்படுதலுடனும், நட்புடனும் இருந்தது. தொழுகை மற்றும் இறை வணக்கங்களை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். ஏழைகளை பராமரிக்கக் கூடியவர் ; விருந்தோம்பல் செய்யக் கூடியவர் ; இறைவன் மீது அதிக நம்பிக்கையை வைத்திருந்தவராக இருந்தார்கள். சில வருடங்களாக திருக்குர்ஆனை ஆழமாக சிந்தித்து ஓதக் கூடிய ஆர்வம் ஏற்பட்டது. ஜமாஅத்தின் பல்வேறு ஆலிம்களிடம் பெரும்பாலும் கேள்விகளை கேட்டறிந்து வந்தார்கள். பல்வேறு மார்க்கங்களை குறித்து படிக்கக் கூடிய ஆர்வமும் இருந்தது.

டாக்டர் மஸ்வூதுல் ஹஸன் ஸாஹிப் கூறுகிறார்கள்: என்னுடைய வக்ஃப் மற்றும் என்னுடைய கல்வி ஆகியவற்றில் மர்ஹூமாவுடைய பெரும் பங்களிப்பு இருந்தது. ஏதாவது மகிழ்ச்சியின் சந்தர்ப்பமாக இருந்தாலோ அல்லது எங்கேயாவது உலாவுவதற்காக செல்ல வேண்டியது இருந்தாலோ அப்போது எனக்கு ஹாஸ்பிடல் உடைய எமர்ஜென்ஸி வேலை வந்து விட்டால் அவர்கள் அதை தியாகம் செய்து விடுவார்கள். நானும் செல்ல மாட்டேன் என்று கூறிவிடுவார்கள். அவ்வாறே கடந்த மூன்று நான்கு வருடங்களாக கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்தார்கள். மிகப் பொறுமையுடனும் தமது நோயையும், துன்பத்தையும் பொறுத்துக் கொண்டார்கள். ஒருபோதும் அதை அவர்கள் வெளிப்படுத்தியது இல்லை.

மர்ஹூமாவுடைய மகன் டாக்டர் காலித் நூரி ஸாஹிப் அவர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இவர்களும் வக்ஃபே ஆர்சிக்காக ஃபஸ்லே உமர் ஹாஸ்பிடலுக்கு வருவதுண்டு. அவர் கூறுகிறார்: என்னுடைய தாயார் ஜமாஅத்தின் கலப்பற்ற ஒரு தொண்டராக இருந்தார். கிலாஃபத்துடன் அளவற்ற நேசமும், கொள்கை பிடிப்பும் வைத்திருந்தார். எப்பொழுதும் எந்த ஒரு வீணான விஷயத்திலும் அதாவது பொய், புறம் பேசுதல், குறை கூறுதல் ஆகியவற்றில் ஈடுபட மாட்டார்கள். திருக்குர்ஆனை முழுமையான பொருளுடன் ஓதுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களையும் படித்து வந்தார்கள். தஸ்கிரா நூலையும் மிகவும் கவனமாக படித்து வந்தார்கள்; அதை எல்லா நேரமும் தம்முடன் வைத்திருப்பார்கள். வரலாற்று கலைப் பொருட்களை ஒன்று திரட்டக் கூடிய ஆர்வமும் அவர்களுக்கு இருந்தது. அருங்காட்சியகத்தை பராமரிக்கக் கூடியவர்கள் மற்றும் ஆய்வாளர்களிடமும் அதை குறித்து கலந்துரையாடல் செய்து வந்தார்கள். இந்த ஆர்வத்தில் அவர்கள் என்னையும் இணைத்திருந்தார்கள். ரப்வாவை சுற்றிலும், குறிப்பாக நதிக்கரை ஓரத்தில் மலைகளில் அவர்கள் சில பொருட்களை கண்டார்கள்; தேடினார்கள். நிலங்களையும், தோண்ட வைத்துள்ளார்கள். அவர்கள் இங்கு லண்டன் வரும்போதும் என்னிடமும் இதே விஷயங்களைதான் பேசி வந்தார்கள். அந்த பொருட்களை எனக்கு காட்டி வந்தார்கள்.

அவர்களுடைய மகன் மேற்கொண்டு எழுதுகிறார்: வசதி குறைவான மக்களுடைய திருமணங்களில் முழுமையான முறையில் பொருளாதார உதவி செய்து வந்தார்கள். அனைத்து ஊழியர்களின் குழந்தைகளையும் கருத்தில் கொண்டார்கள். பெண் பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் ஓத கற்றுக் கொடுப்பார்கள். அவர்களுடைய அனைத்து தேவைகளும் நிறைவேறுவதை உறுதி செய்து வந்தார்கள். மக்களை சந்திக்கும் போது அவர்களின் முகம் மலர்ந்திருக்கும்.

மர்ஹூமாவுடைய மகள் முபாரகா ஸாஹிபா கூறுகிறார்கள்: தாயாருக்கு வாசிக்கக் கூடிய ஆர்வம் அதிகமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூலாக இருந்தாலும் அல்லது கிறிஸ்தவர்கள் பற்றிய விஷயங்களாக இருந்தாலும் அல்லது இந்து மார்க்கத்தைப் பற்றிய நூல்களாக இருந்தாலும் பல்வேறு தலைப்புகளைக் கொண்ட நூல்களை படித்து வந்தார்கள். மேலும் அதைப் பற்றிய அதிகமான அறிவை அவர்கள் பெற்றிருந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு அதிகமாக கண்ணியமளித்து வந்தார்கள். எனது தந்தைக்கு அவர்கள் எப்பொழுதும் ஆதரவு கொடுத்து வந்தார்கள்.

பணி ஓய்வு பெற்ற பிறகு டாக்டர் ஸாஹிப் அவர்கள் வக்ஃப் செய்த போது இவர்கள் வந்து விட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகும் கூட அவருக்கு போதுமான அளவு உலக லாபம் கிடைக்கக் கூடிய வேலை கிடைத்திருக்கும்.

மகள் கூறுகிறார்: என்னுடைய தந்தையின் அஹ்மதியல்லாத உறவினர்களும் இரங்கல் தெரிவிக்க வந்திருந்தார்கள். மர்ஹூமா அவர்கள் குடும்பங்களை இணைக்கக் கூடியவர் என்றும், அனைவரிடமும் தொடர்பு வைத்திருப்பவர் என்றும் அவர்கள் கூறினார்கள்.

பிறகு மகள் கூறுகிறார்: என் தாயார் எனக்கு அறிவுரை வழங்கும்போது, உன் வீட்டு விஷயங்களை வெளியே பேசக் கூடாது என்றும், நீ எதை எழுத விரும்புகிறாயோ அதை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எழுது. அவர்கள் என்ன அறிவுரை செய்வார்களோ அதன்படி செயல்படுவது அவசியமாகும் என்றும் கூறி வந்தார்கள். சண்டை சச்சரவுகளில் நேரத்தை வீணடிக்காதே என்று எனக்கு கூறிவந்தார்கள்.

தாஹிர் ஹார்ட் (இன்ஸ்டிட்யூட்) உடைய டிரைவர் ஜலால் அஹ்மத் கான் கூறுகிறார்:

மிகவும் நல்ல, ஒழுக்கமுடைய, அனுதாபம் காட்டக் கூடிய ஏழைகளை பராமரிக்கக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். எப்பொழுதும் பயணத்தின் போது எங்களை கருத்தில் கொள்வார்கள். பயணத்தின் போது திருக்குர்ஆனுடைய மொழியாக்க சிடி ஐ போடச் சொல்வார்கள். முழு பயணத்திலும் அதைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். என்னுடைய மனைவி மக்களையும் மிகவும் கருத்தில் கொண்டார்கள். ஆரம்ப காலங்களில் நாங்கள் பெரிய நகரங்களுக்கு செல்லும்போது, குறிப்பாக இஸ்லாமாபாத் அங்குள்ள கடைக்காரர்கள் இவர்களை அறிவார்கள். நீண்ட நாட்களுக்கு பிறகு வந்துள்ளீர்களே என்று அவர்கள் விசாரிக்கும் போது நாங்கள் ரப்வாவிற்கு இடம் பெயர்ந்து விட்டோம். அங்கு ஜமாஅத்துடைய ஹாஸ்பிடல் உள்ளது. என் கணவர் அங்கு பணியாற்றுகிறார் என்று எவ்வித அச்சமும் இன்றி அவர்களுக்கு கூறுவார்கள். அதைக் கண்டு நாங்கள் பயந்து கொண்டிருப்போம்.

அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்புடனும். கருணையுடனும் நடந்து கொள்வானாக!

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஹஸன் சானுகோ அபூபக்ர் ஸாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் .புர்கினோஃபோஸூவில் உள்ளூர் முபல்லிஃக் ஆக இருந்தார்கள். கடந்த நாட்களில் 63 வயதில் மரணமடைந்து இருக்கிறார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

அருளுக்குரிய ரமலான் மாதத்தில் தினந்தோறும் ஜோலோ மொழியில் திருக்குர்ஆன் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். இந்த தர்ஸ் ரேடியோ இஸ்லாமிக் அஹ்மதிய்யாவில் ஒலிபரப்பப்பட்டு வந்தது. மரணத்திற்கு ஒருநாள் முன்பு 22 மார்ச் அன்றும் அவர்கள் தர்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். ஆரம்பக் கல்வியை போபூஜலாஸூவில் கற்றார்கள். இது புர்கினாஃபாஸூவுடைய ஒரு நகரமாகும். பிறகு உயர் கல்விக்காக மோரீதானியா சென்று விட்டார்கள். அங்கு கல்வி கற்ற பிறகு மேற்படிப்பிற்காக பிறகு எகிப்தில் உள்ள ஜாமிஆ அல்அஸ்ஹருக்குச் சென்று விட்டார்கள். அரபி மொழியில் உயர் கல்வி மற்றும் அரபி மொழி பேசுவதில் நன்கு புலமை பெற்று விட்டிருந்தார்கள். மிகச் சிறந்த அரபி மொழியை பேசி வந்தார்கள். அல் அஸ்ஹரிலிருந்து திரும்பி வந்த பிறகு ஐவரிகோஸ்டில் குடியேறினார்கள். அங்கு ஒரு மதரஸாவை ஏற்படுத்தினார்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்து வந்தார்கள். அப்போது அவர்கள் அஹ்மதியாக ஆகி இருக்கவில்லை. அனல் பறக்கும் பேச்சு மற்றும் சிறந்த முறையில் எடுத்துரைக்கும் விதம் ஆகியவற்றின் காரணமாக ஐவரிகோஸ்டில் பிரபலமடைந்தார்கள். அஹ்மதி முபல்லிஃக்கள் அப்பகுதியில் தப்லீஃக் செய்தபோது எதிர்ப்பாளர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக பேசுவதற்காக அபூபக்ர் ஸாஹிப் அவர்களை அழைத்து வந்தார்கள். அவர்களுக்கு தம் பேச்சுத் திறமை மீது மிகுந்த பெருமை இருந்தது.

அவரே கூறுகிறார்: விவாதம் ஆரம்பித்தது. அந்நாளில் நான் பெரிய ஜிப்பா ஒன்றை அணிந்து கொண்டு இன்று நான் அஹ்மதிகளை தோற்கடித்து மிகவும் பிரபலமடைந்து விடுவேன். மிகப் பெரிய அந்தஸ்தை பெற்று விடுவேன் என்று கூறிக் கொண்டேன்.

ஆனால் அல்லாஹ் அவர்களது இயல்பில் நன்மையை வைத்திருந்தான். உண்மையும், சான்றுகளும் அஹ்மதிகளிடம் இருப்பதை விரைவிலேயே அவர் உணர்ந்து கொண்டார்; அல் கவ்லுஸ் ஸரீஹ் (எனும் நூல்) அவருக்கு கொடுக்கப்பட்டது. அதை படித்த பிறகு ஆபிஜான் (என்ற அந்த) ஊரில் ஜமாஅத்தின் முபல்லிஃக் அப்துர் ரஹ்மான் கனாத்தே ஸாஹிபுடன் இவர்களின் விவாதம் நிகழ்ந்தது. அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டினான். விரைவிலேயே அவர்கள் துணிவுடன் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவர்களின் பைஅத் சம்பவம் 1986 இல் நிகழ்ந்தது. அப்பொழுது இவர்கள் 24,25 வயதுடைய இளைஞராக இருந்தார்கள்.

பைஅத்திற்கு பிறகு தம்முடைய மதரஸா மற்றும் தம்முடைய புகழ், பெருமை ஆகியவற்றை விட்டு விட்டார்கள். அக்காலத்தில் ஐவரிகோஸ்ட்டில் பிரெஞ்சு அஹ்மதி மாணவர்களுக்காக ஒரு சார்ட் கோர்ஸ் இருந்தது. அவர்கள் அதில் சேர்ந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தார்கள். மிக விரைவிலேயே ஜமாஅத்தின் மிகச் சிறந்த முபல்லிஃக் ஆனார்கள். தம்முடைய தாய் மொழியான ஜோலாவில் சொற்பொழிவாற்றும் திறமை பெற்று இருந்தார்கள். உரத்த குரலுக்கு சொந்தக்காரராகவும், அனல் பறக்கும் சொற்பொழிவாளராகவும் இருந்தார்கள். அவையோர்களை விரைவிலேயே தம் பக்கம் ஈர்த்து விடுவார்கள். இத்ரீஸ் ஷாஹிது ஸாஹிப் அவர்கள் 1990-ல் புர்கினோஃபோஸுவில் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மதிப்பிற்குரிய ஹஸ்ஸன் சானுகோ அபூபக்ர் ஸாஹிப் அவர்களை ஐவரிகோஸ்டில் இருந்து ஃபுர்கினோஃபோஸுவிற்கு மாற்றுவதற்கான ஒப்புதலை வாங்கினார்கள். இங்கு தப்லீஃக் ஜிஹாதில் அவர்கள் பங்கெடுத்தார்கள். மிக விரைவிலேயே ஜோஸோ மொழி பேசக் கூடிய பகுதிகளில் வெற்றிகள் கிடைக்க ஆரம்பித்தன. இங்கு தப்லீஃக் மூலமாக பல புதிய ஜமாஅத்துகள் உருவாகின.

புர்கினோஃபாஸு வின் டோரீ எனும் பகுதியில் நம் ஜமாஅத் மக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். 1999 இல் இவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அந்தப் பகுதியில் அரபி மொழியில் பேச்சு வழக்கு பொதுவானதாக இருந்தது. அங்குள்ள ஆலிம்கள் அரபி அறிவை காட்டி மக்களை ஈர்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அங்கும் இவர்கள் பெரும் பெரும் ஆலிம்களுடன் விவாதங்கள் செய்து அவர்களை தோற்கடித்தார்கள். தொலைதூரப் பகுதிகளில் அவர்கள் தப்லீஃக் செய்து இருக்கிறார்கள். எந்த அளவுக்கு என்றால் அஹ்மதியல்லாத ஆலிம்கள் இவர்களுக்கு முன்னால் வருவதை தவிர்த்துவிடுவார்கள்; இவர்களுடன் முனாஸிரா செய்வதற்கும் அஞ்சி வந்தார்கள். இவர்கள் இந்த பகுதி முழுவதிலும் சான்றோராகவும், அறிஞராகவும் புகழ் பெற்றிருந்தார்கள். அதிகமான அளவில் இந்த பகுதியில் ஜமாஅத்துகள் ஏற்படுத்தப்பட்டன.

மஹ்தியாபாத்தில் ஷஹீதான இமாம் இப்ராஹீம் பதீகா ஸாஹிபா மற்றும் அவர்களுடைய தோழர்களுடன் 1991ல் இவர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. அம்மக்கள் விரைவிலேயே பைஅத் செய்து விட்டார்கள். பிறகு 2023 -ல் அம்மக்கள் ஷஹாத்தடைந்து அஹ்மதிய்யத்தின் மின்னுகின்ற நட்சத்திரங்களாக ஆகி போனார்கள். 2002-ல் போபூஜலாஸுவில் அஹ்மதிய்ய உலகின் முதல் ரேடியோ ஆரம்பிக்கப்பட்ட போது அதில் அபூபக்ர் ஸாஹிப் அவர்கள் முதல் நிலை பேச்சாளராக இருந்தார்கள். இறைவன் பக்கம் அழைக்கக் கூடிய மிகவும் ஆர்வமுள்ள நபராக இருந்தார்கள். இவர்களின் தப்லீஃக்கினால் லட்சக்கணக்கான மக்கள் வரை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

பல ஆண்டுகளாக நேஷனல் செயற்குழுவில் தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்று வந்தார்கள். மரணம் நிகழும் போதும் கூட இவர்கள் செகரட்டரி ரிஷ்தா நாத்தாவாக இருந்துள்ளார்கள். 2012-ல் இவர்கள் மாலியுடைய நகரமான ஸீகாஸோவில் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு அசாதாரணமான தொண்டுகளை செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. 2019-ல் போபூஜலாஸுவில் சில இளைஞர்கள் ஜமாஅத் அமைப்புக்கு எதிராக விஷமத்தனம் செய்த போது நான் இவர்களை திரும்ப போபூஜலாஸுவில் நியமித்தேன். அங்கு அவர்களை ஜமாஅத் தலைவராகவும் நியமித்தேன். அவர்கள் மிகத் துணிவுடனும், நுட்பத்துடனும், உழைப்புடனும் துஆவுடனும் அந்த குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். அனைத்து மக்களும் மீண்டும் பைஅத் செய்து விட்டார்கள்.

மர்ஹூம் அவர்கள் தாயார், மனைவி, சகோதரர், 3 பிள்ளைகள் மற்றும் பேரன் பேத்திகளை விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமுடைய மனைவி ஆயிஷா ஸாஹிபா கூறுகிறார்கள்:

மர்ஹூம் அவர்கள் எல்லா நேரமும் இஸ்லாமியத் தொண்டுக்காக ஆயத்தமாக இருந்தார்கள். உடல்நிலை மோசமாக இருந்த போதிலும் எப்பொழுதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கும், தப்லீஃக் சுற்றுப் பயணங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வந்தார்கள். சில நேரங்களில் நான் அவர்களிடம், உங்களுக்கு உடல் நிலை சரியில்லை ; சிறிது ஓய்வு எடுங்கள் என்று கூறும்போது, நான் என் வாழ்வை அர்ப்பணித்துள்ளேன். எனது இறுதி மூச்சு வரை மார்க்கத் தொண்டில் ஈடுபட்டு இருப்பேன் என்று கூறுவார்கள். எங்களுடைய திருமணம் நடந்த நாள் முதல் இறுதி நாள் வரை நான் நோயுற்று இருப்பதன் காரணமாக “இன்று நான் தஹஜ்ஜுத் தொழ முடியவில்லை” என்று அவர்கள் கூறியதாக எனக்கு தெரியவில்லை. எந்த ஒரு நபரும் எப்பொழுதும் ஜமாஅத் விஷயங்களுக்காக அல்லது மார்க்க தொண்டுகளுக்காக வந்தால் உடனடியாக அவருக்கு உதவி செய்வார்கள். அதற்குப் பிறகு, அவர்கள் நோய்வாய்ப்பட்டாலும் நோய்வாய்ப்படுவாரே தவிர (கண்டிப்பாக உதவி செய்வார்கள்). சந்திக்கக் கூடிய அன்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தவர்கள் ஆகியோருடன் மிகவும் நல்ல முறையில் பழகி வந்தார்கள். எல்லாரையும் அன்புடன் சந்திப்பார்கள். ஒரு முன்னுதாரணமான நபராக திகழ்ந்தார்கள். திருக்குர்ஆனை அதிகமாக நேசித்து வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடைய நேசராக இருந்தார்கள்.

இது வாழ்வை அர்ப்பணித்தவருடைய ஒரு முரப்பியுடைய முன்மாதிரியாகும். நம்முடைய முரப்பிமார்கள் எப்போதும் இதை தம் முன்னால் வைக்க வேண்டும். இவ்வாறான அர்ப்பணித்தலின் ஆன்மாவைக் கொண்டவர்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக!

புர்கினாஃபாஸுவின் முன்னாள் அமீரான இத்ரீஸ் ஷாஹித் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மிக உழைப்புடன் தப்லீஃக் பணியை செய்துள்ளார்கள். மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி இருக்கிறார்கள். மலர்ந்த முகத்தையுடையவராகவும், அறிவு ரீதியாக உறுதியான சான்றுகளை கொடுக்கக் கூடியவராகவும், எல்லா நேரமும் உயரிய தொண்டை செய்வதற்கு முயற்சி செய்யக் கூடியராகவும் இருந்தார்கள்.

உள்ளூர் முபல்லிஃக் தராபுல் ஹஸன் ஸாஹிப் கூறுகிறார்: ஆசிரியர் அபூபக்ர் ஸாஹிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய உண்மையான நேசராக இருந்தார்கள். ஒருநாள் சூரா அஹ்ஸாபுடைய 38-வது வசனத்திற்கு விளக்கவுரை கூறும் போது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை திருமணம் செய்த விவகாரம் தொடர்பாக அஹ்மதியல்லாத மௌலவிகள் எவ்வித சான்றும் இன்றி எழுதியிருக்கும் விஷயங்களை எடுத்துக் கூறும் போது அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. மக்கள் தம் அறியாமை மற்றும் மடமையான கூற்றுகளை இரு உலகின் தலைவராகிய (ஸல்) அவர்களை நோக்கி சுட்டிக் காட்டி இருக்கிறார்களே என்று கூறினார்கள்.

(அஹ்மதிய்யத்தின் எதிரிகளாகிய) இம்மக்கள் இவ்வாறான விஷயங்களை பேசினால் அது பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை அவமதிக்கும் செயல் கிடையாது. ஆனால் அஹ்மதிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கண்ணியம் அளித்தாலும் கூட அது தூதுத்துவத்தை அவமதிக்கும் செயலாக உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை உச்சரித்தாலும் கூட அது தூதுத்துவத்தை அவமதிக்கும் செயலாக கருதப்படுகின்றது.

பிறகு அவர் கூறுகிறார்: சுற்றுப் பயணங்களின் போதும் முறையாக தஹஜ்ஜுதை பேணி வந்தார்கள். கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மிகவும் அதிகமாக இருந்தது. எவராவது ஜமாஅத் அமைப்புக்கு எதிராக பேசினால் ஜமாஅத் அமைப்பை பாதுகாப்பதற்காக உருவிய வாளைப் போன்று முன்னால் வந்து விடுவார்கள். எப்பொழுதும் எவருடனும் பகைமையோ வெறுப்போ கொண்டிருக்கவில்லை.

அல்லாஹ் இவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! இவர்களின் சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளை தொடரக் கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக! இவர்களின் துஆவுக்கான வாரிசாக அவர்களை ஆக்குவானாக!

தமிழாக்கம்

மவ்லவி

A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * *

Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

# ஜுமுஆ பேருரை

**ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு மற்றும் எட்டாம் ஆண்டு நடைபெற்ற சில போர்கள் மற்றும் ஸரிய்யாக்களின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உம்ரத்துல் கஸாவின் சந்தர்ப்பத்தின்போது இரண்டாயிரம் ஸஹாபிகள் இருந்தனர். புறப்படும் நேரத்தில் அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த மக்கள் ஹுதைபியா சந்தர்ப்பத்தில் இருந்தார்களோ அவர்களில் ஒவ்வொருவரும் இதில் கலந்து கொள்வர். ஹுதைபிய்யா சந்தர்ப்பத்தின் போது இருந்த அனைத்து ஸஹாபிகளும் இந்த உம்ராவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தனர்

குறைஷியர்களின் பிரதிநிதியாக வந்த மிக்ஸர் பின் ஹஃப்ஸ் கூறினார்:
முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் உடன்படிக்கையை மீறி நடந்ததை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. அப்போது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப ஆயுதங்களின்றி மக்காவில் நுழைவோம். இதைக் கேட்டு நிராகரிப்பாளர்கள் நிம்மதியடைந்தனர்

தற்போது நான் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆவிற்காக கூற விரும்புகிறேன். பாகிஸ்தானிய அஹ்மதிகள் சுயமும், தங்களுக்காக துஆ செய்யுங்கள். மேலும், நான் கூறியிருந்தது போன்று துரூதின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் இரு நூறு முறை அதனை ஓதுங்கள்.

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

இந்த நேரத்தில் எந்த அளவிற்கு இதன் பக்கம் கவனம் செலுத்த முடியுமோ கவனம் செலுத்துங்கள். நாம் துஆவிற்கான உரிமையை செலுத்தியவாறு கவனம் செலுத்துவோம் என்றால் அப்போதுதான் வெற்றி உள்ளது. எந்த அளவிற்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அளவிற்கு கவனம் செலுத்தப்படவில்லை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 ஏப்ரல் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **18ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

உம்ரதுல் கஸா போரின் விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு துல்கஅதா மாதம் ஒரு உம்ரா செய்திருந்தார்கள். அது 629 ஆண்டு பிப்ரவரி மாதம் நிகழ்ந்ததாகும். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் துல்கஅதா மாதம் ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு உம்ரதுல் கஸாவை நிறைவேற்றுதற்காக புறப்பட்டார்கள்.

இது அதே மாதமாக இருந்தது. அதாவது எந்த மாதத்தில் முந்தைய ஆண்டு இணை வைப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உம்ரா செய்வதிலிருந்து தடுத்திருந்தார்களோ மேலும் ஹுதைபிய்யா என்ற இடத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்திருந்தார்களோ இது அதே மாதமாக இருந்தது. எனவே தற்போது அந்த உம்ராவை பூர்த்தி செய்வதற்காக ஹுஸுர் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

புஹாரீ விரிவுரையாளர் அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள் இதற்கு பல பெயர்களை எடுத்துரைத்துள்ளார்கள். கஸ்வத்துல் கஸா, உம்ரத்துல் களிய்யா, உம்ரா ஸுல்ஹ்,உம்ரதுல் கஸாஸ் என்றும், இந்த உம்ரா கஸ்வத்துல் அமன் என்றும் கூறப்படுகிறது. இதனை உம்ரத்துல் கஸாஸ் என்று ஏன் கூறுகின்றனர் என்றால், மக்கத்து இணை வைப்பாளர்கள் ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு புனிதமான மாதத்தில் துல் கஅதா மாதத்தில் இறைத் தூதர் (ஸல்)அவர்களை உம்ரா செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தியிருந்தனர். எனவே அன்னார் (ஸல்) முந்தைய உம்ராவை நிறைவேற்றுவதற்காக புறப்பட்டுச் சென்றிருந்தார்கள். துல்கஅதா மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் மஸ்ஜிதில் ஹராமில் நுழைந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது தொடர்பாக இந்த வசனம் இறங்கியது. அதாவது,

اَلشَّهْرُ الْحَرَامُ بِالشَّهْرِ الْحَرَامِ
وَالْحُرُمٰتُ قِصَاصٌ

என்ற வசனம் இறங்கியது. (அல்பக்கரா: 195)

பொருள்:

உம்ராவிற்கு புறப்பட்டதன் விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: இந்த உம்ராவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இரண்டாயிரம் ஸஹாபிகள் இருந்தனர். புறப்படும் நேரத்தில் அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த மக்கள் ஹுதைபியா சந்தர்ப்பத்தில் இருந்தார்களோ அவர்களில் ஒவ்வொருவரும் இதில் கலந்து கொள்வர். ஹுதைபிய்யா சந்தர்ப்பத்தின் போது இருந்த அனைத்து ஸஹாபிகளும் இந்த உம்ராவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தனர். ஃகைபர் போரின் போது ஷஹீதாகி விட்ட அந்த ஸஹாபிகளைத் தவிர அல்லது மரணித்துப் போன ஸஹாபிகளைத் தவிர. இவர்கள் மட்டுமின்றி ஹுதைபிய்யா சந்தர்ப்பத்தில் இருந்திராத பல ஸஹாபிகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டனர். அன்னாருடன் குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களும் இருந்தன. அந்த அனைத்து விலங்குகளின் கழுத்துகளிலும் அன்னார் (ஸல்) மாலை அணிவித்தார்கள். மேலும், விலங்குகளை கண்காணிக்கும் பணியில் ஹஸ்ரத் நாஜியா பின் ஜுன்தப் (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் துல் ஹலீஃபா என்ற இடத்தை அடைந்தார்கள். அது மதீனாவில் இருந்து சுமார் ஆறு, ஏழு மைல் தொலைவில் இருக்கும் ஓர் ஊராகும்.அப்போது நூறு குதிரை சவாரிகளை தற்காப்பு வழிமுறையாக தமக்கு முன்னர் அன்னார் (ஸல்) அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை அமீராக ஆக்கினார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இந்தப் பயணத்தில் தம்முடன் இரும்புக் கவசம், ஆயுதங்கள் மற்றும் ஈட்டிகள் போன்றவற்றை உடன் எடுத்துச் சென்றார்கள். அன்னார் (ஸல்) ஆயுதங்களை முன்னால் அனுப்பியும் வைத்திருந்தார்கள். மேலும், அவர்களுக்கு ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅத் (ரலி) அவர்களை பொறுப்பாளராக நியமித்தார்கள்.

(ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 717, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்) (தப்காத்துல் குப்ரா இப்னு ஸஅது, தொகுதி 2, பக்கம் 92,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்) (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) எம்.ஏ அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 838)

உடன்படிக்கை ஏற்பட்டிருந்த நிலையில் உம்ராவிற்கு செல்வதற்கு ஆயுதங்களின் தேவை என்ன இருந்தது? என்ற கேள்வி எழுகின்றது.

தாங்களோ ஆயுதம் ஏந்தியுள்ளீர்கள்; ஆனால் உறையில் வைக்கப்பட்ட வாளைத் தவிர வேறு ஆயுதங்களை கொண்டு வருவதற்கு குறைஷிகள் தடை செய்துள்ளனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு, நாம்

ஆயுதங்களை ஏந்திக் கொண்டு ஹரமில் நுழையமாட்டோம் ; மாறாக, ஏதாவது தாக்குதல் செய்யப்படும் நிலையில் அவை நமக்கு அருகில் ஏதாவது ஓர் இடத்தில் இருக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அங்கு மக்காவில் எடுத்துக் கொண்டு செல்லவில்லை. நாம் (மக்காவிற்கு) வெளியில் வைப்போம். ஏனெனில், அவர்கள் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது. அவர்கள் எந்நேரமும் தாக்குதல் நடத்திவிடக் கூடும். முஹம்மது பின் மஸ்லமா குதிரை சவாரிகளுடன் மார்ருஸ்ஸஹ்ரான் என்ற இடத்தை சென்றடைந்தார்கள். அப்போது அங்கு குறைஷியர்கள் சிலர் அன்னாரை சந்தித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாளை இன்ஷா அல்லாஹ் இந்த இடத்தில் இருப்பார்கள் என்று அவர்களிடம் அன்னார் கூறினார்கள். அந்த மக்கள் குறைஷியர்களிடம் சென்றார்கள். மேலும், இது தொடர்பாக அவர்களிடம் கூறினர். அப்போது அந்த மக்கள் பயந்து விட்டனர். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மர்ருஸ்ஸஹ்ரான் என்ற இடத்தை அடையும்போது எல்லா ஆயுதங்களையும் யஃஜஜ் என்ற இடத்திற்கு அனுப்பி விடுங்கள்; அந்த இடம் மக்காவிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது. ஹுஸுர் (ஸல்) அவர்கள் ஆயுதங்களுடனும், போர்த் தளவாடங்களுடனும் மக்காவிற்கு வருகின்றார்கள் என்ற தகவல் மக்கத்து காஃபிர்களுக்கு கிடைத்தபோது அவர்கள் மிகவும் அச்சமடைந்து விட்டனர். மேலும், அவர்கள் சில ஆட்களுடன் நிலைமையை ஆராய்வதற்காக மக்காவிலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ள மார்ருஸ்ஸஹ்ரான் இடம் வரை சென்றடைந்தார்கள்.

பிரதிநிதியாக சென்றிருந்த மிக்ஸர் பின் ஹஃப்ஸ் கூறினார்:

முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் உடன்படிக்கையை மீறி நடந்ததை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப ஆயுதங்களின்றி மக்காவில் நுழைவோம். இதைக் கேட்டு நிராகரிப்பாளர்கள் நிம்மதியடைந்தனர். அப்போது, மிக்ஸர் கூறினார்: நாங்கள் தங்களை நன்மை மற்றும் பற்றின் சிறப்புகளின் உருவமாக கருதுவதற்கு இதுவே காரணமாகும்,

நிராகரிப்பாளர் ஆவார். அவரும் கூட இவ்வாறு கூறுகிறார்: நாங்கள் தங்களை நன்மை மற்றும் பற்றின் சிறப்புகளின் உருவமாக கருதுகின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅத் (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் சில ஸஹாபிகளை அந்த ஆயுதங்களின் பாதுகாப்பிற்காக நியமனம் செய்தார்கள்.மேலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு ஏற்ப வாளைத் தவிர வேறு எந்த ஆயுதமும் இருக்கவில்லை. அன்னார் (ஸல்) ஸஹாபா பெருமக்களின் கூட்டத்துடன் தல்பியா கூறியவாறு ஹரமை நோக்கி முன்னேறினார்கள். குர்பானிக்கான விலங்குகளை மஸ்ஜித் ஹராமிலிருந்து அரை மைல் தொலைவில் இருக்கும் மக்காவின் ஒரு பள்ளத்தாக்கான தீதுவாவை நோக்கி அனுப்பி வைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கஸ்வா என்ற தமது ஒட்டகத்தில் சவாரி செய்திருந்தார்கள். அன்னார் (ஸல்) ஹஜுவான் பக்கமாக மக்காவில் நுழைந்தார்கள். ஹஜுவான் என்பது முஹஸ்ஸப் பள்ளத்தாக்கின் பக்கம் அமைந்துள்ள ஒரு மலையாகும். அது பைத்துல்லாஹ்விலிருந்து ஒன்னரை மைல் தொலைவில் உள்ளது. (ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 90 -91, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்ரத்துல் கஸாவின் சந்தர்ப்பத்தின் போது மக்காவில் நுழைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் அன்னாருக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். மேலும், நிராகரிப்பாளர்களின் சந்ததிகளே! அன்னாருக்கு வழிவிடுங்கள் என்று அவர் கூறிக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையுடன் இன்று நாங்கள் உங்களுக்கு எப்படிப்பட்ட அடி கொடுப்போம் என்றால் உங்களது மூளை அதன் இடத்திலிருந்து அகற்றி விடும்; மேலும் நண்பரை அவரது நண்பரிடமிருந்து கவனமற்றவராக ஆக்கிவிடும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்: இப்னு ரவாஹாவே! நீர் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் மற்றும் அல்லாஹ்வின் ஹரமில் இந்தக் கவிதை வரிகளை படிக்கின்றீரா? நீரோ இந்த தவறான விஷயத்தை கூறிக் கொண்டிருக்கின்றீர். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே, அவரை விட்டுவிடும். இவை அந்த அம்புகளை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை ஆகும். (திர்மதி, அப்வாபுல் அதப், ஹதீஸ் எண்: 2847). இது ஓர் அறிவிப்பாகும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை கவிதைகள் படிப்பதிலிருந்து தடுத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உமரே! இவர் கூறிக்கொண்டிருப்பதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மௌனமாகிவிட்டார்கள். மேலும், பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் படித்துக் கொண்டிருக்கின்ற இந்த கவிதைவரிகள் எரிச்சலூட்டுகின்ற கூற்றுகளாகும். எனவே இவற்றை கூறாதீர். மாறாக,

لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ نَصَرَ عَبْدَهُ

وَأَعَزَّ جُنْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

என்று கூறுவீராக!

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவருமில்லை. அவன் தனித்தவன் ஆவான். அவன் தனது அடியாருக்கு உதவி செய்துள்ளான்.. மேலும், தனது படைக்கு கண்ணியமளித்தான்; மேலும், தனித்தவனாக அனைத்து படைகளையும் தோல்வியுறச் செய்துவிட்டான். (ஷரஹ் ஸர்கானீ, தொகுதி 3, பக்கம் 320, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தமது சொற்களில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

மக்காவின் தங்குமிடமங்களில் ஒன்றான மார்ருஸ் ஸஹ்ரான் வரை அன்னார் (ஸல்) சென்றடைந்த போது அன்னார் (ஸல்) உடன்படிக்கைக்கு ஏற்ப அனைத்து கனமான ஆயுதங்களையும், கவசங்களையும் அங்கு ஒன்று திரட்டி விட்டார்கள். மேலும், தாம் உட்பட அனைத்து ஸஹாபிகளும் உடன்படிக்கைக்கு ஏற்ப உறையில் அடைக்கப்பட்ட வாளுடன் மட்டுமே ஹரமில் நுழைந்தார்கள். ஏழு ஆண்டுகள் நாட்டை துறந்து சென்ற பிறகு முஹாஜிர்கள் மக்காவில் நுழைவது என்பது ஒன்றும் சாதாரண விஷயமாக இருக்கவில்லை. அவர்களின் உள்ளமோ ஒருபக்கம் மக்காவில் தங்கள் மீது இழைக்கப்பட்ட அந்த பெரும் அநீதிகளை எண்ணி இரத்தம் வடித்துக் கொண்டிருந்தது. மேலும் மற்றொரு பக்கம், மீண்டும் வல்ல இறைவன் தங்களுக்கு கஅபாவை வலம் வருவதற்கு வாய்ப்பு நல்கிவிட்டான் என்று இறைவனின் இந்த அருளைக் கண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தார்கள். மக்காவாசிகள் மக்காவிலிருந்து வெளியேறி மலைகள் மற்றும் குன்றுகள் மீது ஏறி நின்று கொண்டு முஸ்லிம்களை பார்த்துக் கொண்டிருந்தனர். இறைவன் தங்களுக்கு மீண்டும் மக்காவில் நுழைவதற்கு நற்பேறு நல்கிவிட்டானா? இல்லையா? என்பதை இன்று அவர்களுக்கு வெளிப்படுத்தி விட வேண்டும் என்று முஸ்லிம்களின் உள்ளம் விரும்பிக் கொண்டிருந்தது. ஆக, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தின் போது போர் பாடல்களை பாட துவங்கி விட்டார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவரைத் தடுத்து விட்டார்கள். மேலும், இந்தக் கவிதைகளை பாடாதீர் ; மாறாக, இறைவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லை ; அந்த இறைவனே தனது தூதருக்கு உதவி செய்தான் ; மேலும் நம்பிக்கையாளர்களை இழிவின் குழியில் இருந்து வெளியேற்றி உயரச் செய்துள்ளான். இறைவன் தான் எதிரிகளை அவர்களுக்கு முன்னால் வெருண்டோடச் செய்துள்ளான் என்று கூறுமாறு கூறினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 329)

ஹஸ்ரத் இப்னு அபீ அவ்ஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் உம்ரா செய்தபோது, நாங்களோ இணை வைப்பாளர்களின் இளைஞர்களிடமிருந்து அன்னாரை பாதுகாத்துக் கொண்டிருந்தோம். அதாவது, இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுப்பு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் துன்பம் விளைவித்து விடாத வண்ணம் பாதுகாப்பு கொடுத்து கொண்டிருந்தார்கள். (புஹாரீ, கிதாபுல் மகாஸீ, பாப் - உம்ரத்துல் கஸா, ஹதீஸ் 4255)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தபோது, சில குறைஷியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

(ஸல்) அவர்கள் மீதான பகைமையின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஸஹாபிகள் பைத்துல்லாஹ்வை வலம் வருவதை பார்க்க முடியாததன் காரணமாக மலைகளுக்கு சென்று விட்டனர். ஆனால், சில நிராகரிப்பாளர்களோ தாருன் நித்வாவில் ஒன்றுகூடிவிட்டனர். அங்கு நின்று கொண்டு வலம் வந்த காட்சியை காணத் தொடங்கினர். மேலும், இந்த முஸ்லிம்கள் எப்படி வலம் வருவார்கள்? இவர்களுக்கோ பசியும் மதீனாவின் காய்ச்சலும் பலவீனமாக்கி வைத்து விட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் மஸ்ஜித் ஹராமை சென்றடைந்து இஸ்திபாஃ செய்தார்கள். அதாவது போர்வையை எவ்வாறு அணிந்து கொண்டார்கள் என்றால், அன்னாரின் வலது கையினுடைய தோள்பட்டையும், கரமும் திறந்திருந்தது. மேலும், அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவா! இந்த நிராகரிப்பாளர்களுக்கு முன்னால் தனது வலிமையை வெளிப்படுத்தக் கூடிய இவர்கள் மீது உனது கருணையை புரிவாயாக!

பின்னர் அன்னார் (ஸல்) தமது ஸஹாபிகளுடன் (தவாஃப் எனும்) வலம் வருதலின் தொடக்கத்தில் மூன்று சுற்றுகளில் தமது தோள்பட்டையை அசைத்து அசைத்து நெஞ்சை நிமிர்த்தியவாறு சென்று வலம் வந்தார்கள். நீங்கள் (எங்களை) பலவீனர்களாக கருதுகின்றீர்கள் ; ஆனால், நாங்கள் பலவீனர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தினார்கள்.

புஹாரியில் இது தொடர்பாக இவ்வாறு அறிவிப்பு உள்ளது:

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களும், அன்னாரது ஸஹாபிகளும் வந்தனர். அப்போது இணை வைப்பாளர்கள் கூறினர்: உங்களிடம் எப்படிப்பட்ட மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர் என்றால், அவர்களை மதீனாவின் காய்ச்சலானது பலவீனப்படுத்தப்படுத்தியுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளிடம், நீங்கள் மூன்று முறை சுற்றி வாருங்கள் என்று கட்டளையிட்டார்கள். இதனை அரபியில் ரமல் என்று கூறுவார்கள். தவாஃப் செய்யக் கூடிய துவக்கத்தில் தவாஃபின் மூன்று முறை ரமல் செய்கின்றார். அன்னார் (ஸல்) ஸஹாபிகள் மீது பரிவு காட்டியவாறு அவர்களை எல்லா சுற்றுகளிலும் ஓடுவதற்கு கட்டளையிடவில்லை.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பைத்துல்லாஹ் மற்றும் ஸஃபா மர்வாவிற்கிடையே இணை வைப்பாளர்களுக்கு தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக ஓடினார்கள். ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சவாரியில் ஸஃபா மற்றும் மர்வாவிற்கிடையில் ஓடினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் மர்வாவிற்கு அருகில் குர்பானி கொடுத்தார்கள். அதன் பிறகு ஆயுதங்களை பாதுகாக்க நியமிக்கப்பட்ட ஸஹாபிகளிடம் யஃஜஜ் என்ற இடத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில ஸஹாபிகளை அனுப்பினார்கள். இவர்கள் அவர்களுடைய இடத்தில் சென்று டியூட்டி கொடுக்க வேண்டும். மேலும் அதன் மூலம் அவர்களும் உம்ரா மற்றும் குர்பானி போன்றவற்றை செய்து கொள்ளும் பொருட்டு இவர்களை அனுப்பினார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ, தொகுதி 3, பக்கம் 322, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஏற்கனவே அங்கு ஆயுதங்களை பாதுகாக்கும் டியூட்டியில் அமர்ந்திருந்த அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் வந்துவிடுங்கள்; உம்ரா செய்யுங்கள். இந்த சில புதிய ஆட்களை அங்கு அனுப்பிவிட்டார்கள். அவர்கள் சென்று இவர்களின் பணியை மேற்கொள்வார்கள் என்று கூறினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களுடன் திருமணமும் நிகழ்ந்தது. இதன் விவரம் இவ்வாறாகும். அதாவது இதே பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மைமூனா பின்தே ஹாரிஸ் அவர்களை திருமணம் செய்தார்கள். இந்த திருமணத்தை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள் தமது திருமணத்திற்கான அதிகாரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரான ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் மனைவிக்கு அதாவது தமது சகோதரி ஹஸ்ரத் உம்மே ஃபஸ்ல் (ரலி) அவர்களுக்கு வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் உம்மே ஃபஸ்ல் (ரலி) அவர்கள் அந்த அதிகாரத்தை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் திருமணம் முடித்து வைத்தார்கள். மேலும், ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களுக்கு நானூறு திர்ஹம் மஹராக நிர்ணயிக்கப்பட்டது.

(இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 718, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் மனைவியின் சகோதரியான மைமூனா ஜுவைரியா அவர்கள் விதவையாகியிருந்தார்கள். அவர்கள் மக்காவில் இருந்தார்கள். ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாரை திருமணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் விருப்பம் கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அதற்கு ஒப்புதல் நல்கிவிட்டார்கள். (தீப்பாச்சா தஃப்ஸீரூல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 329 - 330)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் மூன்று தினங்கள் இருந்தார்கள். மூன்றாவது நாள் ஆனபோது, குறைஷியர்கள் ஹுவைதிப் பின் அப்தில் உஸ்ஸாவை சில நபர்களுடன் ஹுஸூர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அனுப்பினர். ஓர் அறிவிப்பின்படி, குறைஷியர்களின் இந்தக் குழு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சென்றது. மேலும் தற்போது நீங்கள் தங்கும் காலம் பூர்த்தியாகிவிட்டது. எனவே தற்போது நீங்கள் சென்று விடுங்கள்.

அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் சற்று அதிகமாக தங்கிவிட்டால் அதனால் உங்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது? நாங்கள் இங்கு திருமணம் செய்து உணவு சமைப்போம். எனது திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் உங்களுக்கும் விருந்தளிப்போம்.

குறைஷியர்கள் கூறினர்: எங்களுக்கு உமது விருந்துக்கான அவசியம் இல்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். மேலும், தமது சேவகர் அபூ ராஃபிஃ அவர்களை உம்மே மைமூனா அவர்களிடத்தில் விட்டு விட்டார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு தன்ஈமிற்கு அருகில் மக்காவிலிருந்து சுமார் ஆறு மைல் தொலைவில் அமைந்திருந்த ஒரு பெரும் பள்ளத்தாக்கான ஸரிஃப் என்ற இடத்தில் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள்.

ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களின் பெயர் பர்ரஃ என்ற இருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதனை மாற்றி அவர்களுக்கு மைமூனா என்று பெயர் சூட்டினார்கள். ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் கடைசியாக திருமணம் நடந்தது. ஹிஜ்ரீ 51-ல் ஸரிஃப் என்ற இடத்திலேயே அதாவது எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாருடைய திருமணம் நிகழ்ந்ததோ அங்கேயே அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. (புஹாரீ, கிதாபுல் மகாஸீ, பாடம் உம்ரத்துல் கஸா, அறிவிப்பு எண்: 4251)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: நான்காவது நாள் மக்காவாசிகள் கோரிக்கை வைத்தனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடன்படிக்கைக்கு ஏற்ப மக்காவிலிருந்து வெளியேற வேண்டும். மேலும் அன்னார் (ஸல்) உடனடியாக எல்லா ஸஹாபிகளுக்கும் கட்டளையிட்டார்கள். நீங்கள் உடனடியாக மக்காவை விட்டு மதீனாவை நோக்கி புறப்பட்டு விடுங்கள். மக்காவாசிகளின் உணர்வுகளை கருத்தில் கொண்டு புதிதாக திருமணம் செய்து கொண்ட மைமூனா (ரலி) அவர்களை கூட பின்னால் விட்டு விட்டார்கள். அதாவது அவர்கள் பின்னர் பயண சவாரிகளுடன் வந்து


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953
toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339
alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327
gemscertify22@gmail.com




GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

கொள்ளட்டும்! என்று விட்டு விட்டார்கள். மேலும் சுயமே தமது ஒட்டகத்தை ஓட்டியவாறு ஹரமினுடைய எல்லைகளிலிருந்து வெளியேறிவிட்டார்கள். மேலும், அங்கேயே மாலை நேரத்தில் அன்னாருடைய துணைவியார் மைமூனா (ரலி) அவர்கள் கொண்டு சேர்க்கப்பட்டார்கள். மேலும், முதல் இரவில் காட்டில் மைமூனா (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து ஆஜரானார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 330)

ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இந்த புனித பந்தம் ஏற்பட்ட இந்த இடம் மிகவும் நேசத்திற்குரியதாக இருந்தது. எனவேதான் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள் இவ்வாறு உயில் எழுதியிருந்தார்கள்: அதாவது நான் மரணமடைந்து விடும்போது எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரம் இருந்ததோ அந்த இடத்தில் என்னை நல்லடக்கம் செய்ய வேண்டும். எங்கு நான் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தொண்டிற்காக முன்வைக்கப்பட்டேனோ அங்கு நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்கள்.

இறைநியதி இவ்வாறு அமைந்துள்ளது. அதாவது அன்னார் (ரலி) ஹஜ் செய்வதற்காக சென்றிருந்தார்கள் ; மேலும் அங்கேயே மக்காவில் நோய்வாய்ப்பட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு அன்னார் (ரலி) கூறினார்கள்: என்னை மக்காவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லுங்கள்; ஏனெனில், உமது மரணம் மக்காவில் நிகழாது என்று என்னிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

ஆக, மக்கள் அன்னாரை மக்காவிலிருந்து எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். மேலும் ஸரஃப் என்ற இடத்தை அடைந்தே இருந்தார்கள். அந்நிலையில் உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களின் ஆன்மா உடலிலிருந்து பிரிந்து சென்று விட்டது. அன்னாரின் மரணம் நிகழ்ந்து விட்டது. ஆக, அன்னாருடைய உயிலுக்கு ஏற்ப அதே இடத்திலேயே அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மரண நேரத்தில் அன்னாரின் வயது என்பது அல்லது என்பத்தி ஒன்றாக இருந்தது.

(இம்தாஉல் அஸ்மாஃ, தொகுதி 12, பக்கம் 212, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளின் சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் பராஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து புறப்படத் துவங்கியபோது, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, எனது சிறிய தந்தையாரே! எனது சிறிய தந்தையாரே! என்று விளித்துக் கொண்டே வந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவரை எடுத்துக் கொண்டார்கள். அவரது கரங்களை பற்றினார்கள். மேலும், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், உமது சிறிய தந்தையாரின் மகளை அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ரலி) அவரை தமது சவாரியில் அமர்த்திக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களும் அவர் தொடர்பாக தர்க்கம் செய்தார்கள். நான் இவரை எடுத்துக் கொண்டேன்; இவர் எனது சிறிய தந்தையாரின் மகள் ஆவார் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) கூறினார்கள். இவர் எனது சிறிய தந்தையாரின் மகள் ஆவார்; மேலும் இவரது பெரியன்னை எனது மனைவி ஆவார் என்று ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும், இவர் எனது சகோதரரின் மகள் ஆவார் என்று ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது பெரியன்னைக்கு ஆதரவாக அதற்கான தீர்ப்பை வழங்கினார்கள். மேலும் கூறினார்கள்: பெரியன்னை தாயின் இடத்தில் இருக்கிறார் என்று கூறினார்கள்.

இதுவும் ஒரு விவகாரத்திற்கான தீர்வாக அமைந்துவிட்டது. அதாவது கஸாவில் ஏராளமான சச்சரவுகள் ஏற்படுகின்றன. அன்னார் (ஸல்) கூறினார்கள்: பெரியன்னை தாயின் அந்தஸ்தில் இருக்கின்றார். அவரிடம் கொடுத்து விட்டார்கள். மேலும், நீர் எம்மிடமிருந்து ஆவீர்; நான் உம்மிடமிருந்து ஆவேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அன்னாரை உற்காசப்படுத்தினார்கள். மேலும், நீர் உருவம் மற்றும் ஒழுக்கத்தில் என்னுடன் ஒப்புமை கொண்டவர் ஆவீர் என்று ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். மேலும் நீர் எமது சகோதரர் ஆவீர்; மேலும் எம்மால் விடுதலை செய்யப்பட்டவர் ஆவீர் என்று ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

தாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளுடன் திருமணம் செய்ய மாட்டீர்களா? என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு, அவர் எனது பால்குடி சகோதரரின் மகள் ஆவார் ; அவருடன் இவ்வாறு திருமணம் செய்து கொள்ள முடியாது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் துல் ஹஜ் மாதத்தில் மதீனாவிற்கு திரும்பிச் சென்றார்கள்.

(புஹாரீ கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4251)

பனூ ஸுலைம் கோத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஒரு போர்படை ஸரிய்யா அஃக்ரத் பின் அபீ அவ் ஜாஃ ஆகும். இந்த ஸரிய்யா துல் ஹஜ் மாதம் ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு நிகழ்ந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்ரம் (ரலி) அவர்களை ஐம்பது நபர்களுடன் பனூ ஸுலைமை நோக்கி அனுப்பினார்கள். பனூ ஸுலைமைச் சார்ந்த ஓர் உளவாளி ஹஸ்ரத் அஃக்ரத் (ரலி) அவர்களுடன் இருந்தான். அவன் முன்னால் சென்று தனது சமுதாயத்தை எச்சரிக்கை செய்து விட்டான். மேலும் அவர்கள் ஒரு பெரும் படையை ஒன்று திரட்டி விட்டனர். ஹஸ்ரத் அஃக்ரம் (ரலி) அவர்கள் அவர்களிடம் சென்றடைந்தபோது பனூ ஸுலைம் அவர்களுடன் போர்புரிவதற்கு ஆயத்தமாகிவிட்டது. ஹஸ்ரத் அஃக்ரம் (ரலி) அவர்கள், அவர்களுக்கு இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும்படி அழைப்பு விடுத்தார்கள். அதற்கு, நீர் எந்த விஷயத்தின் பக்கம் எங்களை அழைக்கின்றீரோ எங்களுக்கு அதற்கான எந்த தேவையும் இல்லை என்று அவர்கள் கூறினர். இதன் பிறகு இரண்டு தரப்பிலும் சிறிது நேரம் அம்பு எறியப்பட்டது. இதற்கிடையில் பனூ ஸுலைமிற்கு ஆதரவாக மேலும் கூடுதல் படை வந்துவிட்டது. மேலும், அவர்கள் முஸ்லிம்களை எல்லாப்பக்கத்திலிருந்தும் சுற்றி வளைத்துவிட்டனர். முஸ்லிம்கள் கடுமையான போர் புரிந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்களில் பெரும்பாலார் ஷஹீதாகி விட்டனர். மேலும், ஹஸ்ரத் அஃக்ரம் (ரலி) அவர்களும் கொலையுண்டவர்களுடன் கடுமையாக காயமடைந்து வீழ்ந்து விட்டார்கள். பின்னர் ஸஃபர் மாதம் ஒன்றாம் தேதி, ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றடைந்து விட்டார்கள்.

(துப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 94, தாருல் குதுபில் இல்மியா, 1990)

அடுத்து, கதீதை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஃகாலிப் பின் அப்தில்லாஹ் லைஸீ (ரலி) அவர்களுடைய ஸரிய்யாவைப் பற்றிய குறிப்பாகும். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃகாலிப் பின் அப்தில்லாஹ் லைஸீ (ரலி) அவர்களை ஸஃபர் மாதம் ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு பனூ லைஸ் கோத்திரத்தின் கிளையான பனூ முலவ்விஹ் கோத்திரத்தை நோக்கி அனுப்பினார்கள். பனூ முலவ்விஹ் கதீத் என்ற இடத்தில் வசித்து வந்தனர். கதீத் என்ற இடம் மதீனாவிலிருந்து சுமார் இருநூற்றி எட்டு மைல் தொலைவில் அமைந்திருந்தது. (கஸ்வாத் வ ஸரிய்யா, பக்கம் 413, ஃபரீத் பப்ளிஷர் ஸாஹிவால்)

கதீத் என்பது உஸ்ஃபான் மற்றும் குதைதிற்கு இடையில் ஒரு நீரூற்று ஆகும். (புஹாரீ கிதாபுஸ் ஸவ்ம், ஹதீஸ் எண்: 1944)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃகாலிப் பின் அப்தில்லாஹ் அவர்களை பதினைந்து நபர்களுடன் அனுப்பி வைத்தார்கள். மேலும், இந்த ஸரிய்யாவின் முழக்கம் அமித்! அமித்! என்பதாக இருந்தது. ஹஸ்ரத் ஜுன்தப் பின் மகீஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃகாலிப் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களை ஒரு ஸரிய்யாவில் அனுப்பி வைத்தார்கள். அதில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அன்னார் (ஸல்) கதீத் என்ற இடத்தில் வசித்து வந்த பனூ முலவ்விஹ் கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு கட்டளையிட்டிருந்தார்கள்.

ஆக, நாங்கள் புறப்பட்டோம். மேலும் கதீதை சென்றடைந்தபோது, இப்னு பர்ஸாஃ ஹாரிஸ் பின் மாலிக் லைஸீ என்ற ஒரு நபர் எங்களுக்கு கிடைத்தார். நாங்கள் அவரை கைது செய்துவிட்டோம். நான் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்காக

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 29 MAY 2025 Issue No. 22

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

புறப்பட்டு இருக்கின்றேன்; மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் சென்று கொண்டிருக்கின்றேன் என்று அவர் கூறினார்.

அதற்கு நாங்கள், நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் எண்ணத்துடன் புறப்பட்டுள்ளீர் என்றால் பின்னர் ஒரு பகல் மற்றும் ஓர் இரவிற்கான பயண உணவு உமக்கு பாதிப்பை ஏற்படுத்தி விட முடியாது. அதாவது எமது கட்டுப்பாட்டில் இருப்பதால் ஒன்றும் ஆகிவிடாது என்று நாங்கள் கூறினோம். இதைத் தவிர வேறு எண்ணம் இருக்குமென்றால் பின்னர் நாங்கள் அதனை உண்மைப்படுத்திக் கொள்வோம் என்று கூறினோம். பின்னர் நாங்கள் அவரை உறுதியாக கட்டி வைத்து விட்டோம். மேலும், எங்களுடைய ஒரு கருப்பு நிற தோழர் அவருடைய பெயர் ஸுவைத் பின் மன்ஹர் என்பவரை கண்காணிப்பாளராக நியமித்தோம். நாங்கள் சென்று விட்டோம். எதுவரை என்றால், சூரியன் மறையும் நேரத்தில் நாங்கள் கதீதை சென்றடைந்து விட்டோம். நாங்கள் பள்ளத்தாக்கின் ஒரு கரையில் இருந்தோம். எனது தோழர்கள் என்னை உளவாளியாக ஆக்கி அனுப்பினார்கள். நான் ஒரு குன்றை சென்றடைந்தேன். அங்கிருந்து என்னால் அவர்களை காண முடிந்தது. நான் அதன் மீது ஏறிவிட்டேன். எனது தலையை உயர்த்தினேன். மேலும், முகங்குப்புற படுத்துக் கொண்டுவிட்டேன். அங்கு ஒரு நபர் தனது கூடாரத்திலிருந்து வெளியேறி என்னை பார்த்து விட்டார். அவர் ஓர் அம்பு எய்தார். அது எனது ஒரு பக்கத்தில் தாக்கியது. ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப, அந்த அம்பு எனது கண்களுக்கு இடையில் நெற்றியின் மீது பட்டது என்று அன்னார் (ரலி) கூறுகின்றார்கள். ஆயினும் நான் எனது இடத்தில் உறுதிப்பாட்டுடன் இருந்தேன். அவனுக்கு சந்தேகம் ஏற்படாமல் இருப்பதற்காக எந்த வகையிலும் அசையவே இல்லை. பின்னர் அவர் கூடாரத்தினுள் நுழைந்து விட்டார். நாங்கள் அவர்களுக்கு சிறிது அவகாசம் கொடுத்தோம். எந்த அளவிற்கு என்றால், அவர் நிம்மதியாக உறங்கிவிட்டனர். அப்போது காலை நேரத்தில் நாங்கள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டோம். அவர்களில் போர் வீரர்களை கொன்று விட்டோம். மேலும் அவர்களின் பிள்ளைகளை கைது செய்து விட்டோம். கால்நடைகளை ஓட்டிக் கொண்டு வந்து விட்டோம். மேலும் எங்களை நோக்கி எப்படிப்பட்ட ஒரு பெரும் படை வந்தது என்றால் எங்களிடம் அதனுடன் போரிடும் ஆற்றல் இருக்கவில்லை. அவர்களின் ஒரு நபர் சென்று பெரும் படையை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். கூறுகின்றார்கள்: நாங்கள் கால்நடைகளை அழைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தோம். எங்களில் யாரும் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. மேலும், இப்னு பரஸாஃ மற்றும் அவருடைய தோழரை கடந்து சென்றபோது, அவர்கள் இருவரையும் எங்களுடன் சேர்த்துக் கொண்டோம். எதிரி மிகவும் அருகில் வந்தடைந்து விட்டான். எந்த அளவிற்கு என்றால், எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் கதீத் பள்ளத்தாக்கு மட்டுமே எஞ்சியிருந்தது. அல்லாஹ் அந்தப் பள்ளத்தாக்கில் வெள்ளப் பெருக்கை ஏற்படச் செய்துவிட்டான். அப்போது எங்களுக்கு எந்தவொரு மேகமோ அல்லது மழையோ தென்படாமல் இருந்தது. எனவே அல்லாஹ் எப்படிப்பட்ட ஒரு விஷயத்தை அனுப்பிவிட்டான் என்றால், அதனுடன் போட்டியிடுவதற்கு எவரிடமும் ஆற்றல் இருக்கவில்லை. மேலும் எவராலும் அதனை கடந்து வரமுடியவில்லை. எதிரி நின்று கொண்டே எங்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். மேலும் நாங்கள் அவர்களுடைய விலங்குகளை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தோம். அவர்களில் எவருக்கும் எங்கள் பக்கம் வருவதற்கு பாக்கியம் கிடைக்கவில்லை. மேலும், வேகமாக விலங்குகளை ஓட்டிக் கொண்டு சென்றோம் எந்த அளவிற்கு என்றால் நாங்கள் அவர்களை பின்னால் விட்டு விட்டு கடந்து வந்து விட்டோம். அதாவது எதிரிகளை பின்னால் விட்டுவிட்டோம். பின்னர் அவர்களால் எங்களை பிடிக்க முடியவில்லை. மேலும் நாங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தை வந்தடைந்து விட்டோம். (ஷரஹ் ஸர்கானீ, தொகுதி 3, பக்கம் 332 -333, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

எவ்வாறிருப்பினும், இன்னும் பல சம்பவங்கள் இருக்கின்றன.

தற்போது நான் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆவிற்காக கூற விரும்புகிறேன். பாகிஸ்தானிய அஹ்மதிகள் சுயமும், தங்களுக்காக துஆ செய்யுங்கள். மேலும், நான் கூறியிருந்தது போன்று துரூதின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் இரு நூறு முறை அதனை ஓதுங்கள்.

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

இந்த நேரத்தில் எந்த அளவிற்கு இதன் பக்கம் கவனம் செலுத்த முடியுமோ கவனம் செலுத்துங்கள். நாம் துஆவிற்கான உரிமையை செலுத்தியவாறு கவனம் செலுத்துவோம் என்றால் அப்போதுதான் வெற்றி உள்ளது. எந்த அளவிற்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அளவிற்கு கவனம் செலுத்தப்படவில்லை. இவ்வாறு கூறுவது மேலும் சில மக்களோ இவ்வாறு எனக்கு எழுதியும்விடுகின்றனர். அதாவது துஆக்களால் மட்டும் எதுவும் நடக்காது; வேறு சிலவற்றை செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர். வேறு என்ன செய்ய வேண்டும்?

நமது ஆயுதம் துஆக்கள் மட்டுமே ஆகும். இது தொடர்பாக நான் பலமுறை கூறிவிட்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துரைத்து விட்டேன். துஆக்களால் ஒன்றும் நடக்காது என்ற சிந்தனை மிகவும் தவறான சிந்தனையாகும்.

எவ்வாறிருப்பினும் துஆக்கள் மட்டுமே நமது வெற்றிக்கான தீர்வாகும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக! மேலும், நாம் துஆ செய்வதற்கான உரிமையை நிலைநாட்டுபவர்களாக திகழ்வோமாக! துஆக்களால் ஒன்றும் ஆகாது! என்று மட்டும் நாம் கூறிவிட்டால் மேலும் அவற்றிற்கான உரிமையை செலுத்தவில்லையென்றால் பின்னர் இது நாம் அல்லாஹ்விடம் செய்யக் கூடிய தவறான முறையீடாகும். எனவே நாம் இஸ்திஃக்ஃபாரும் செய்ய வேண்டும்.

இன்றும் ஒரு சம்பவம் கராச்சியில் நிகழ்ந்துள்ளது. பயங்கரவாதிகள் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதிகள் ஆவர். நமது மஸ்ஜிதின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும், ஒரு அஹ்மதியை ஷஹீதாக்கியும் விட்டனர்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

அதன் விவரமோ இன்னும் கிடைக்கவில்லை. விவரம் வந்த உடன் எடுத்துரைக்கவும் படும். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் இந்த அநீதியார்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், மே 9, 2025, பக்கம் 2 -7)

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான்தாஹிர்

* * * * * *

**National Watch Company**
Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad